விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 24

வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 08 திங்கட்கிழமை (23.07.2012)

பக்கங்கள்: பதினாறு

டெங்கு ஒழிப்புப் பணியில்



அணி திரள்வோம்

## க.பொ.த. உயர்தர பரீட்சார்த்திகளுக்கு விசேட வாய்ப்பு

க.பொ.த உ/த பரீட்சையில் தோற்றுவதற்கு புதிய மற்றும் பழைய பாடத்திட்டத்தில் விண்ணப்பிக்க எதிர்பார்த்துள்ளவர்களுக்கு விசேட வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.


மேலதிக தகவல்களை 1911 என்ற இலக்கத்திற்கு அழைத்துப் பெற்றுக்கொள்ள முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறினார். 02

# புலி உறுப்பினர்கள் மீதான விசாரணை: தமிழ் பகுதிகளில் 3 விசேட நீதிமன்றுகள்

முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு எதிரான வழக்கு விசாரணையைத் துரிதப்படுத்துவதற்கு மன்னார், வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களில் விசேட நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்காகத் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறினார். இது குறித்து நீதிச் சேவை ஆணைக்குழுவுடனும் பிரதம நீதியரசருடனும் பேச்சுவார்த்தை மேற்கொண்டுள்ளதாகவும் அமைச்சர் சொன்னார்.

விசேட நீதிமன்றங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா இரண்டு நீதிபதிகள் நியமிக்கப்படுவர் அதிலொருவர் தமிழ் பேசும் நீதிபதியாக இருப்பார். தற்போது 75 ஆகவுள்ள நீதிபதிகளின் 90 ஆக அதிகரிக்க வேண்டுமென்றும் அமைச்சர் கூறினார்.

கொழும்பு, கொம்பனித்தெருவிலுள்ள முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.



29 வருடங்களுக்கு முன்னர் 1983 ஜூலையில் எடுக்கப்பட்ட படம் இது. கொழும்பு, பொரளையில் நிர்வாணமாக்கப்பட்டு தமிழ் இளைஞர் ஒருவர் காடையர்களால் தாக்கப்படுவதைக் காட்டும் புகைப்படத்தைப் பிடித்தவர் அப்போது இளைஞராகவிருந்த சந்திரகுப்த அமரசிங்க என்பவர். 'அத்த' என்ற சிங்களப் பத்திரிகையின் புகைப்படப்பிடிப்பாளர் இவர். புகைப்படம் பிடிக்க முனைந்தபோது இந்தச் சிங்கள இளைஞரும் தாக்குதலுக்கு இலக்கானார்.

# எனக்கு தொலைபேசி மிரட்டல் வந்தது - மன்னார் நீதிபதி நான் நீதிபதியோடு கதைக்கவே இல்லை - அமைச்சர் ரிசாட்

மன்னார் மாஜிஸ்திரேட்டும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான அந்தோனிப்பிள்ளை ஜூட்சன் கடந்த 17ஆம், 18ஆம் திகதிகளில் தொலைபேசி மூலம் தனக்கு மிரட்டல்கள் விடுக்கப்பட்டனவென்று நீதிச்சேவை ஆணைக்குழுவுக்குப் புகார் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பதியூதின் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட ஒருவர், தனக்கு மிரட்டல்கள் விடுத்தாரென்று மாஜிஸ்திரேட் தனது புகாரில் தெரிவித்துள்ளார். மீனவர் பிரச்சினையொன்று தொடர்பாக நீதிபதி முன்னர் அளித்த தீர்ப்பை மாற்றவில்லை என்றால் பின்விளைவுகளைச் சந்திக்க வேண்டியேற்படும் என்றும் தனக்கு மிரட்டல் விடுக்கப்பட்டதாம்.

இக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக அமைச்சர் ரிசாட் பதியுதீனிடம் கேட்டபோது,

நீதிபதிக்குத் தான் எவ்வித தொலைபேசி அழைப்புகளையும் எடுக்கவில்லை என்றும், நீதிமன்றத்தின் மீது தான் தாக்குதல்களைத் தூண்டிவிடவில்லையென்றும் அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

நான் கொழும்பில் தங்கியிருந்த வேளை மன்னார் அசம்பாவிதங்களைப் பற்றிக் கேள்விப்பட்டேன்.

நான் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்சவுக்குத் தொலைபேசி அழைப் பொன்றினை ஏற்படுத்தி, மன்னார் செல்வதற்கு ஹெலிகொப்டர் வசதி ஏற்படுத்தித் தருமாறு கேட்டேன்.

நான் அங்கு அரசாங்க அதிபருடனும் பாதுகாப்புப் படை அதிகாரிகளுடன் மீனவர்களின் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவது பற்றிக் கலந்துரையாடினேன். நான் நீதிபதிக்குத் தொலைபேசி அழைப்பு எடுக்கவே இல்லை.

## வத்தளையைச் சேர்ந்த தம்பதி இயக்கச்சி விபத்தில் பலி

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற தனியார் பஸ் பளை - இயக்கச்சியில் தடம்புரண்டதில் பலியான இருவரின் சடலங்கள் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் மரண விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டிருந்தன.

நேற்று முன்தினம் 21ஆம் திகதி இரவு பத்து மணிக்கு இடம்பெற்ற இவ்விபத்தில் மேலும் இருவருமாக நால்வர் மரணமானார்கள். 02

### சிறுவர், பெண்கள் மீதான துஷ்பிரயோகம்:

## குற்றவாளிகளுக்கு மரண தண்டனை இல்லை

"சிறுவர் மற்றும் பெண் கள் மீதான பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டுகளில் குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களுக்கு மரண தண்டனை விதிப்பதென்பது கஷ்டமான காரியமாகும். இக்குற்றச் செயல்களைப் புரிபவர்களும் மனிதர்கள் என்பதால் அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கக் கூடாதென்று மனித உரிமைக் குழுக்கள் வற்புறுத்தி வருகின்றன என்று சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த கூறினார்.

குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கப்படக் கூடாதென்றும் இவ்வாறான மோசமான குற்றங்களை இழைப்பவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட வேண்டுமென்றும் கூறினார்.

பாலியல் வல்லுறவுக் குற்றங்களுக்கு மரண தண்டனையை மீளவும் அமுல்படுத்துவது 02

## தமிழக மீனவர்கள் 23 பேர் மன்னாரில் கைது

இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்த 23 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார்.

இவர்கள் நேற்று (22) அதிகாலை மன்னார் கடற்பரப்பில் வைத்து 5 படகுகளுடன் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப் படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். கைது செய்யப்பட்ட மீனவர்கள் ராமேஸ்வரம் - ராமநாதபுரத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


## வடக்கு கிழக்கில் 346 பேர் தாதியர் பயிற்சிக்கு தெரிவு

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து உயர் பதவிகளுக்கு வருகின்ற பெரும்பாலானவர்கள், அவர்களது பிரதேச மக்களுக்கு சேவை செய்ய பெரிதாக விரும்புவது இல்லை என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அந்த மாகாணங்களிலிருந்து உயர் பதவிகளுக்கு வருபவர்கள் கொழும்பு மற்றும் கண்டி பிரதேசங்களில் தான் சேவையாற்ற விரும்புகின்றார்கள். 'இது பெரும் கவலைக்குரிய நிலைமை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். 02

## இந்திய ஜனாதிபதியாக பிரணாப் முகர்ஜி தெரிவு

### புதன்கிழமை பதவியேற்கிறார்



இந்தியாவின் புதிய குடியரசுத் தலைவராகத் தேந்தெடுக்கப்பட்ட பிரணாப் முகர்ஜி வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை பதவியைப் பொறுப் பேற்கவுள்ளார். ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளராகப் போட்டியிட்ட 02

## சப் இன்ஸ்பெக்டர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரல்

இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் ஓர் அங்கமான விசேட அதிரடிப் படைக்கு சப் இன்ஸ்பெக்டர்களை ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்ப விபரங்களும், படிவமும் கடந்த இருபதாம் திகதிய அரசாங்க வர்த்தமானியல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட தராதரங்களை உடைய 02

# நாட்டில் சட்டம் ஒழுங்கு சீரழிய ஒருபோதும் இடமளிக்க முடியாது

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

அரசாங்கம் நீதிச் சுதந்திரத்தை உச்ச அளவில் மதிப்பதோடு மாத்திரமல்லாமல், நீதிச் சுதந்திரம் குறித்து கடும் எதிர்பார்ப்புகளுடன் செயற்படுவதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கண்டியில் தெரிவித்தார்.கண்டி மண்யொருவ விவசாய கட்டட வளாகத்தில் நேற்று இடம் பெற்ற தேசிய விவசாய வாரக் கண்காட்சியில் பங்குபற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், சட்டம் ஒழுங்கு சீரழிய இடமளிக்க முடியாது. சட்டம் ஒழுங்கு இல்லாமல் நாடொன்றை ஆட்சி செய்ய முடியாது. நாட்டின் சட்டத்தை உச்ச அளவில் பாதுகாப்பதற்கு அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

அன்று கினியன் குணவர்த்தன மனித உரிமைகள் வழக்கில் வெற்றிபெற்ற சந்தர்ப்பத்தில், தீர்ப்பு வழங்கிய நீதிபதியின் வீட்டுக்கு கல்லெறியப் பட்டதையும் ஜனாதிபதி இங்கு நினைவுபடுத்தியதோடு, அன்று நாட்டில் ஜனநாயகம் இவ்வாறுதான் பாதுகாக்கப் பட்டது என்றும் கூறினார்.

1973ஆம் ஆண்டில் அரசியல் யாப்புத் திருத்தம் செய்த சந்தர்ப்பத்தில் நீதிபதிகள் உச்சநீதி மன்ற நீதியரசர் முன்பாக சத்தியப்பிரமாணம் செய்தனர். ஆனால் அது ஜனாதிபதிக்கு முன்பாக இடம்பெற வேண்டுமென்றும், சத்தியப்பிரமாணம் சரியான முறையில் இடம்பெறவில்லையென்றும் கூறி நீதிபதிகள் நீதிமன்றம் சென்றபோது, நீதிமன்றக் கதவுகள் இழுத்து மூடப்பட்டிருந்த யுகமும் இந்த நாட்டில் இருந்ததாகவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.நான் தொழில் ரீதியாக ஒரு சட்டத்தரணி, எமது சட்டத் தொழில் துறையும், நீதித் துறையும் மிகவும் சிநேகபூர்வமாக செயல் படுகின்றன. நீதிச் சுதந்திரத்தை இல்லாமல் ஆக்குவதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எமது



அரசாங்கம் இடமளிக்காது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# மானிப்பாயில் ஆயுதங்களுடன் நால்வர் கைது

மானிப்பாயில் நான்கு இளைஞர்கள் கடந்த 17ஆம் திகதி ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டனர்.

T-56 உட்பட வேறு பல ஆயுதங்களுடன் இவர்கள் பிடிபட்டனர்.

இவர்கள் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சுதாகரன், சுரேந்திரன், சாந்தன், மதிராஜ் ஆகிய நால்வருமே கைது செய்யப்பட்டவர்களாவர். சுதாகரன் என்பவரே பிரதான சந்தேக நபராவார் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நால்வரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

## இந்திய ஜனாதிபதியாக.... (தொடர்)

பிரணாப் முகர்ஜி 69 சத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட எதிரணியின் ஆதரவு பெற்ற முன்னாள் மக்களவைத் தலைவர் பி.ஏ. சங்மா 31 சத வாக்குகளைப் பெற்றார்.

இந்திய குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான தேர்தல் அதிகாரியான மக்களவைச் செயலர் வி.கே. அக்னிஹோத்ரி, பிரணாப் முகர்ஜியின் வெற்றியை முறைப்படி அறிவித்தார்.

நாடாளுமன்றம் மற்றும் மாநிலங்களின் சட்டப்பேரவை உறுப்பினர்கள் வாக்களித்த இந்தத் தேர்தலில், மொத்தம் 4659 வாக்குகள் பதிவாயின.

அவற்றில் செல்லுபடியான 4,578 வாக்குகளின் மதிப்பு 10 இலட்சத்து 29 ஆயிரத்து 750 என கணக்கிடப்பட்டது. அதன்படி, பிரணாப் முகர்ஜிக்குக் கிடைத்த வாக்குகள் ஏழு இலட்சத்து 13 ஆயிரத்து 187 என கணிக்கப் பட்டது. பி.ஏ. சங்மாவுக்குக் கிடைத்த வாக்குகள் 3 லட்சத்து 15 ஆயிரம் என கணிக்கப் பட்டது.

செல்லாத வாக்குகளின் மதிப்பு 18 ஆயிரத்து 221 என கணிக்கப்பட்டது.

இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 11 மணிக்கு வாக்கு எண்ணிக்கை துவங்கியது.

முதலில், எம்.பி.க்களின் வாக்குகள் எண்ணப்பட்டு, பின்னர் அகர-வரிசைப்படி, மாநில வாரியாக எம்.எல்.ஏ.க்களின் வாக்குகள் எண்ணப்பட்டன. எம்.பி.க்களைப் பொறுத்தவரை, மொத்தமுள்ள 748 வாக்குகளில், பிரணாபுக்கு 527 வாக்குகள் கிடைத்தன. சங்மாவுக்கு 206 வாக்குகள் கிடைத்தன.

ஜெயலலிதா தலைமையிலான அதிமுக மற்றும் பாஜக உள்ளிட்ட காங்கிரஸ் எதிர்ப்பு கட்சிகளின் ஆதரவுடன் சங்மா களம் இறங்கினார்.

ஆளும் கூட்டணியில் உள்ளவர்கள் கூட தனக்கு வாக்களிக்க வாய்ப்பிருப்பதாக சங்மா அவர்கள் கூறிவந்த நிலையில், இன்றைய முடிவுகள் அதற்கு எதிர்மாறாக இருந்தன.

கர்நாடகத்தில், சங்மாவுக்குக் கிடைக்க வேண்டிய பாஜக வாக்குகளில் சில பிரணாப் முகர்ஜிக்குக் கிடைத்திருக்கின்றன. இது பாஜக தலைவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மாலையில் முடிவுகள் வெளியான நிலையில், பிரதமர் மன்மோகன் சிங், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் சோனியா காந்தி, உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் மற்றும் பல்வேறு தலைவர்கள் பிரணாப் முகர்ஜியின் இல்லத்துக்குச் சென்று வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

பிரணாப் முகர்ஜிக்கு, ஆளும் கூட்டணியில் உள்ள காங்கிரஸ், திமுக உள்ளிட்ட கட்சிகள் மட்டுமன்றி, எதிர்க்கட்சி அணியில் உள்ள ஐக்கிய ஜனதா தளம், சிவசேனை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகளும் ஆதரவளித்தன.

சங்மாவுக்கு அதிமுக, பாஜக, பிஜு ஜனதா தளம் உள்ளிட்ட கட்சிகள் ஆதரவளித்தன. தேமுதிக, தெலுங்கு தேசம், இந்திய கம்யூனிஸ்ட் உள்ளிட்ட சில கட்சிகள் தேர்தலைப் புறக்கணித்தன.

# கஹவத்தை கொலைகள்: கூரிய ஆயுதங்களால் வெட்டி, எரிக்கப்பட்டனர்

கஹவத்தை, கொட்டகெத்தனவில் கடந்த 19ஆம் திகதி வீட்டுக்குள் வைத்து எரியூட்டிக் கொல்லப்பட்ட தாய் மற்றும் மகளின் சடலங்கள் நேற்று முன்தினம் அடக்கம் செய்யப்பட்டன, இவர்கள் கொலை செய்யப்பட்ட பின்னர் எரிக்கப்பட்டிருக்கலாமெனச் சந்தேகம் நிலவுகிறது. பேமாவதி என்ற மூதாட்டியும் அவரது மகளான புஷ்பவதி என்பவருமே கொல்லப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரும் கூரிய ஆயுதங்களால் வெட்டிக் கொல்லப்பட்ட பின்னர் எரிக்கப்பட்டனரென்று பிரேத பரிசோதனையிலிருந்து தெரிய வருகிறது. தாயின் தலையில் துணியால் சுற்றப்பட்ட பின்னர் எரியூட்டப்பட்டதற்கான தடயங்கள் காணப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

## சப் இன்ஸ்பெக்டர்.... (தொடர்)

இலங்கைப் பிரஜைகள் விண்ணப்பிக்க முடியுமென யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார். தமிழ் பேசும் இனங்களைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்க முடியுமாவென்று கேட்டபோது 'ஆம்' என்று குறிப்பிட்டார்.

இப் பதவி தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நான்காம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

## குற்றவாளிகளுக்கு.... (தொடர்)

குறித்த கொள்கை வகுப்பு ஆவணமொன்று நீதியமைச்சினால் ஆராயப்பட்டு வருகிறது. அதிகரித்துவரும் சிறுவர் மற்றும் பெண்கள் மீதான துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்துவதற்காக கடுமையான தண்டனை வழங்குவது குறித்து அமைச்சு ஆராய்ந்து வருகிறது என்றும் அமைச்சர் கூறினார்.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுக் குற்றங்களுக்குத் தற்போதைய சட்டப்படி இருபது வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்க முடியுமென்று சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் சட்ட அதிகாரி திருமதி குமுது பெரேரா தெரிவித்தார். தற்போதைய சட்டத்தில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் பற்றி ஆராய்வதற்காகக் குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளதாகவும் திருமதி. பெரேரா கூறினார்.

இவ் வருடம் இதுவரை சிறுவர் துஷ்பிரயோக மற்றும் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் ஆயிரத்துக்கு மேல் இடம்பெற்றுள்ளன என்றும் நீதியமைச்சு வட்டாரங்கள் சுட்டிக் காட்டின.

## வடக்கு கிழக்கில்.... (தொடர்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் நிலவும் தாதியர் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் அந்தந்த ஆஸ்பத்திரிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 346 இளைஞர், யுவதிகள் தாதியர் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கும் வைபவம் பத்தரமுல்லையிலுள்ள ஜனகயாகேந்திர நிலையத்தில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், கடந்த 30 வருடங்களாக வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை அரசாங்கங்களால் முன்னெடுக்க முடியாது இருந்தது.

இதற்கு பயங்கரவாதம் பெரும் தடைக்கல்லாக இருந்தது. அந்தப் பயங்கரவாதம் இப்போது முழுமையாக ஒழிக்கப் பட்டுள்ளது. வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் பாரிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. நாட்டில் அச்சம், பீதியற்ற சூழ்நிலை ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது.

இவ்வாறான நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இந்த அடிப்படையில் தாதியர் வெற்றிடங்களை நிரப்பவென அம்மாகாணங்களிலேயே க.பொ.த. உ/த விஞ்ஞான பிரிவில் கற்றவர்களைத் திரட்டுவதற்கு முயற்சி செய்தோம். அம்முயற்சி வெற்றி அளிக்கவில்லை.

இதன் காரணத்தினால் தான் அந்த மாகாணங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும் 346 பேரை தெரிவு செய்து தாதியர் பயிற்சி அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இவர்களுக்கு மூன்று வருடங்கள் தாதியர் பயிற்சி அளிக்கப் படும்.

ஆனால் பயிற்சியைப் பூர்த்தி செய்வோர் கட்டாயமாக பத்து வருடங்கள் அம்மாகாணங்களிலேயே கடமையாற்ற வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## க.பொ.த உயர்தர .... (தொடர்)

தனியார் பரீட்சார்த்திகள் www.doenets.lk என்ற இணையத்தள முகவரிக்குச் சென்று அதில் உள்ள விண்ணப்பப்படிவத்தை நிரப்பி பரீட்சை கட்டணத்தை தபால் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டை தொலைநகல் மூலம் அனுப்பவேண்டும்.

பாடசாலை பரீட்சார்த்திகள் அதிபரின் கையொப்பத்துடன் விண்ணப்பப்படிவத்தை நிரப்பி பரீட்சைகள் திணைக்களத்திற்கு தொலைநகல் செய்ய வேண்டும்.

நாளை தொடக்கம் 27ஆம் திகதிவரை தபால் மற்றும் தொலைநகல் ஊடாக விண்ணப்பிக்க முடியும்.

இது தொடர்பில் - "1911" அல்லது 0112 784 208 , 0112 784 537, 0112 785 200, 0112 784 201, 0112 785 202, 0112 784 204, 0112 786 205, 0112 784 206, 0112 787 207 ஆகிய இலக்கங்கள் ஊடாகத் தகவல் பெற முடியும்.

விண்ணப்பத்தை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கங்கள் - 0112 785 226 , 0112 785 779 , 0112 784 422 ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன.

இதேவேளை 2012 ஆம் ஆண்டுக்கான உ/த பரீட்சை ஓகஸ்ட் 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வத்தளையைச் சேர்ந்த.... (தொடர்)

ஹேகித்த வீதி - வத்தளையை சேர்ந்த கந்தையா - கந்தசாமி (வயது 67) இவரின் மனைவி கந்தசாமி சரோஜினி தேவி (வயது 64) ஆகியோரே இச்சம்பவத்தில் மரணமானவர்கள் சடலங்கள் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை பிரேத அறையில் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

காயமடைந்து கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோர்கள் விபரம் வருமாறு

1. சர்வேஸ்வரை ஐயர் பத்மநாதன் 39
2. அருள்சீலன் கரிகரன் 26
3. நாகராசா மிக்ஷன் 31
4. பரஞ்சோதி நிஷாந்தன் 23
5. நிசாந்தன் கேசினி 6
6. ஆறுமுகம் சசிகரன் 19
7. எம். ஜர்மதா 27
8. ஸ்ரீஸ்கந்தராசா சுஜந்தா 27
9. தேவலிங்கம் நிஜன் 12
10. குணசேகரம் மதிவேகன் 19
11. தில்லையம்பலம் சுகுமாரன் 45
12. பிரமினி நாககருணா 26
13. கே. காமினி 19
14. செந்துரன், தாட்சாயினி 27
15. என்.எம். ஜயவர்த்தனா 38
16. கொட்டகொட சந்தனா 37
17. டோமினிற் மேஸ்சாம் 10
18. கனகரத்தினம் பெரியதம்பி 26

# இந்தியா சென்ற இலங்கை கராத்தே வீரர்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனராம்

இந்தியாவில் கராத்தே போட்டியில் பங்குபற்றச்சென்ற இலங்கையர்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர் என இந்திய தொலைக்காட்சி சேவை ஒன்று தெரிவித்துள்ளது.

இந்தியாவில் நடைபெறும் சர்வதேச கராத்தே சுற்றுப்போட்டியொன்றில் பங்குபற்றச் சென்ற இலங்கையர்கள் மூவரை தமிழீழ ஆதரவு ஆர்ப்பாட்டங்கள் காரணமாக இலங்கைக்குத் திரும்பிச் செல்லுமாறு சுற்றுப்போட்டி ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர்.

கோயம்புத்தூர் பொள்ளாச்சி நகரில் இச்சுற்றுப்போட்டி நடைபெறுகிறது. மேற்படி இலங்கையர்கள் போட்டியில் பங்குபற்ற விருந்தனர். எனினும் மேற்படி ஆர்ப்பாட்டங்கள் காரணமாக அவர்களை இலங்கைக்கு திரும்பிச் செல்லுமாறு ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கையர்கள் இப்போட்டியில் பங்குபற்றுவது தொடர்பாக ஏற்பாட்டாளர்களிடம் பெரியார் திராவிட கழகம் மற்றும் சில அமைப்புகள் ஆட்சேபம் தெரிவித்துள்ளன. இலங்கையில் தமிழர்கள் அமைதியாக வாழவிடப்படவில்லை என அவ்வமைப்புகள் குற்றம் சுமத்தி, ஆட்சேபத்தை தெரிவித்தன.

போட்டியில் பங்குபற்றுவதற்காக இலங்கையர்கள் மூவரும் ஏற்கனவே சென்னையை அடைந்திருந்த நிலையில் அவர்களை பொள்ளாச்சிக்கு வரவேண்டாம் எனவும் இலங்கைக்கு திரும்பிச் செல்லுமாறும் ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

## இவ்வாரத்தில் பாரிய குற்ற செயல் இடம்பெறவில்லை

### பொலிஸ் மா அதிபர்

(வலிகாமம்)

யாழ்.மாவட்ட பொலிஸ் பிரிவினுள் பெருமளவில் குறற்றச் செயல்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற கருதப்படும் பலர் பொலிசாரினால் கைது செய்யப்ட நீதிமன்றத்தின் மூலம் தண்டனைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்.மாவட்ட பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கும் யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்களுக்கும் இடையே நடைபெறும் வாராந்த சந்திப்ப யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ளிக்பெரெரா தலைமையில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் சனிக்கிழமை இடம்பெற்றது.

இச்சந்திப்பில் கலந்துகொண்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ளிக்பெரேரா தொடர்ந்து கருத்துக் கூறுகையில், பாரிய குற்றச் செயல்கள் இந்த வாரத்தில் இடம்பெறவில்லை. ஆனாலும் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான சங்கிலியை வாங்கிக் கொண்டு ஏமாற்றியமை சம்பந்தமாக ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிசில் 24 ஆயிரம் ரூபா திருடப்பட்டது சம்பந்தமாக செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து மூவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் மூலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

சுன்னாகம் பொலிஸ் பகுதியில் உள்ள வன்னியசிங்கம் வீதியில் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. இதனை விட சிறிய குற்றங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை, நெல்லியடியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது புலிக்கொடி காட்டிய சம்பவம் சம்பந்தமாக யாரும் பொலிசாரிடம் முறையிடவில்லை. அவ்வாறு ஒரு சம்பவம் இடம்பெற்றதாக யாராவது முறையிட்டால் தாம் அது சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொள்ள முடியும் என யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்திருந்தார்.

இந்த சந்திப்பின்போது பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் ஊடகவியலாளர்கள் நெல்லியடியில் ஆர்ப்பாட்டம் இடம் பெற்ற வேளையில் புலிக்கொடியுடன் மோட்டார் சைக்கிளில் திரிந்தவர்களை பொலிசார் கைது செய்யாமை பற்றி கேட்ட போது மேற்கூறிய பதிலை அவர் ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்துள்ளார்.

## டெங்கு நுளம்புக்கு இடம் கொடுத்த 1809 பேர் மீது வழக்கு

டெங்கு ஒழிப்பு மாதத்தில் டெங்கு நுளம்பு பரவ இடம்கொடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 1809 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2012 ஜுன் 25 முதல் ஜுலை 25 வரை டெங்கு ஒழிப்பு மாதமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவிக்கின்றது. இதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது டெங்கு நுளம்பு பரவும் வகையிலான 7500 இடங்கள் இனங்காணப்பட்டதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கடந்த 7 மாதங்களில் டெங்கு நோயால் 75 பேர் உயிரிழந்துள்ளதுடன் 15,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## சிறந்த விவசாயியாகத் தெரிவு



(அளவெட்டி)

தேசிய விவசாய வியாபார சபையால் வழங்கப்பட்ட சிறந்த விவசாயி தெரிவில் யாழ்.மாவட்டத்தில் சிறந்த விவசாயியாக சுன்னாகம் தெற்கைச் சேர்ந்த கந்தையா தியாகலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் இவருக்கான இக்கௌரவ விருது வழங்கப்பட்டது.

சுன்னாகம் தெற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவரான அவர் பல்வேறு அமைப்புக்களிலும் இணைந்து பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவர் கோதுமைப் பயிர்ச் செய்கை உட்பட பல பரீட்சார்த்தப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு கௌரவிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முத்தமிழ் விழா

(அளவெட்டி)

ானிப்பாய் இந்துக்கல்லூரியில் சுவாமிவிபுலானந்தர் நினைவு தினமும் முத்தமிழ் விழாவும் கல்லூரி முதல்வர் எஸ்.சிவஞேஸ்வரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது

இந்நிகழ்விற்கு யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறை வாழ்நாட்பேராசிரியர் அ.சண்முகதாஸ் பிரதமவிருந்தினராகவும் பலாலி ஆசிரியர் பயிற்ச்சி கலாசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் சோ.பத்மநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் மாணவர்களது கலைநிகழ்வுகளான தனிநடிப்பு, குழுஇசை, தாளலயம், பேச்சு, பட்டிமன்றம், நாடகம், போன்றன இடம்பெற்றன.

## இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தா கீரிமலைக்கு விஜயம்



தனது துணைவியார், துணைத் தூதுவர் மகாலிங்கம் உட்பட ஏனைய அதிகாரிகளுடன் ஆலயத்திறக்க விஜயம் மேற்கொண்ட இந்திய உயர்ஸ்தானிகரை ஆலய பிரதம குரு ராஜஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் வரவேற்றார்.

ஆலயம் மற்றும் அப் பிரதேசத்தில் வாழும் மக்களின் தற்போதைய வசதிகள் மற்றும் வாழ்வாதார உதவிகள் தொடர்பாக உயர்ஸ்தானிகர் கேட்டறிந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவர் கோ.சுகிர்தன், வடமாகாண ஆளுநரின் செயலாளர், எல்.இளங்கோவன், சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான அமைப்பின் செயலார் சு.பரமநாதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## சைவப்புலவர் எஸ்.ரி.குமரனுக்கு விருது

(அளவெட்டி)

அளவெட்டி பத்தனை ஞான வைரவர் ஆலயத்தின் திருவிழாவின் போது 15 நாட்கள் தொடர்சியாக கந்தபுராணம் எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவாற்றிய யாழ்.மத்திய கல்லூரியின் ஆசிரியர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரனிற்கு சொல்லின்நாயகம் எனும் விருது ஆலயபரிபாலன சபைத் தலைவரினால் வழங்கப்பட்டது.

## பரந்தனில் சிசுவின் சடலம் மீட்பு

(கிளிநொச்சி)

பரந்தன் நகரில் சிறுவன் ஒருவன் வழங்கிய தகவலையடுத்து வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சிசு ஒன்றின் சடலத்தை கிளிநொச்சி பொலிஸார் மீட்டனர்.

இச் சிசுவின் மரண விசாரணையை கிளிநொச்சி மரணவிசாரணை அதிகாரி டாக்டர் கே.திருலோகமூர்த்தி மேற்கொண்டு, யாழ்.போதனா வைத்தியசாலைச் சட்ட வைத்திய அதிகாரிக்கு இச்சடலத்தை பிரேத பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

பரந்தன் முல்லைத்தீவு வீதியில் 10ஆம் ஒழுங்கையில் இச்சிசுவின் சடலம் மீட்கப்பட்டது. இதனையடுத்து. சிசுவின் தாயான, திருமணமாகாத யுவதியான கமலேஸ்வரி மற்றும் திருமதி சோமாவதி ஆகியோரை பொலிஸார் கைது செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## இன்றைய இராசி பலன் (23.07.2012)

நந்தன வருடம் ஆடித்திங்கள் 8 ஆம் நாள் திங்கட்கிழமை (ஆடிப்பூரம்)

**நட்சத்திரம்:** பூரம் பிற்பகல் 12.24 வரை அதன்பின் உத்தரம்

**திதி:** சதுர்த்தி காலை 8.17 வரை அதன்பின் பஞ்சமி

**சுபநேரம்:** 12.02- 1.32 இராகுகாலம் 7.32- 9.02

(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)

**மேடம்** - தொழில் மேன்மை, பணப்புழக்கம், பொருள் சேர்க்கை

**இடபம்** - சுபகாரியம், இல்லச் சிறப்பு, தேசுகம்

**மிதுனம்** - ஆரோக்கியக் குறைவு, சிறுதூரப் பிரயாணம், சகோதர சஞ்சலம்

**கடகம்** - தொழில் விருத்தி, காரிய அனுகூலம், வாக்கு மேன்மை

**சிங்கம்** - மனச்சஞ்சலம், உஷ்ணரோகம், தொழில் சிரமம்

**கன்னி** - மார்புரோகம், வீண் விரயம், பிரயாணக் கஷ்டம்

**துலாம்** - காரிய சித்தி, அதிக இலாபம், பெரியோர் சேர்க்கை

விருச்சிகம் - முயற்சியால் பலன், பிரயாணம், எதிர்பாராத வரவு

**தனுசு** - கல்வி முன்னேற்றம், சொத்து சேர்தல், தந்தை வழி உதவி

**மகரம்** - ரோக பயம், செலவினம், ஜீவன கஷ்டம்

**கும்பம்** - பணப்புழக்கம், சுதாகலம், நண்பர்கள் உதவி

**மீனம்** - பொருட் செலவு, பிரயாணக் கஷ்டம், எதிரிகளால் தொல்லை

ஜோதிடர் பால.இரத்தினசேகர்.

# இலங்கை பொலிஸ் திணைக்களம் உதவிப் பொலிஸ் பரிசோதகர் பதவி - விசேட அதிரடிப்படை

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் விசேட அதிரடிப்படை உதவிப் பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப் பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண் டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பத விப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2012.08.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற் குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப் படல் வேண்டும். தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற் றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக் களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. சம்பள அளவுத்திட்டம்.- ரூபா 1,90,200 - 7 x 2,160 - 2 x 2,880- 25 x 3,840 - ரூபா 3,07,080. மேலும் அரச உத்தியோகத் தர்களுக்கான வாழ்க்கைச் செலவு கொடுப் பனவுக்கும் அத் துடன் 31/ 11 ஆம் இலக்க மற்றும் 2011.12.12 ஆந் திகதிய அரசநிர்வாக சுற்றுநிருபத்துக்கு அமைவான கொடுப்பனவு களுக்கும் உரித்துடையவராவர். மேற்கூறப்பட்ட சம்பள அளவுத் திட்டத்திற்கு மேலதிக மாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதம் தோறும் வழங்கப்படும் :-

(அ) விசேட கடினக் கொடுப்பனவுகள் :
(1) வடக்கு/ கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 1,200/=
(2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 600/=
(ஆ) இணைந்த கொடுப்பனவுகள் :
(1) வடக்கு/ கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 12,000/=
(2) மற்றைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 6,400ஃஸ்ரீ
(அ) இலவச போக்குவரத்து வசதிகள்.
(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும்.
(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும்.
(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவிகள் வழங்கப்படும்.
(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள் கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.
(ஊ) விசேட அதிரடிப்படையின் பயிற்சியை முடித்து விசேட அதிரடிப்படையின் சேவையில் இருக்கும் காலம் வரை மட்டும். விசேட அதிரடிப்படைக்குரிய கொடுப்பன வுகள் வழங்கப்படும்.

4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :
(அ) வய தெல்லை :
* வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதி யன்று 18-25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற் கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும், பாதுகாப்பு உதவி உத்தியோகத் தர்களுக்கும் (SA) விண்ணப்பங்களினை ஒப்படைக்கும் கடைசித் திகதி அன்று 30 வயதிற்கு உட்பட்டவராக இருந்தால் அவர் களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.
(ஆ) கல்வித் தகைமைகள் :
க. பொ. த. (சா. தர) பரீட்சையில் கணிதம்/ ஊடக மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றுள்ளதுடன் ஒரே தடை- வயில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். க. பொ. த. (உ. தர) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
குறிப்பு 1.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப் படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத் தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும்.
**குறிப்பு 2.**- க. பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந் திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படும்.
குறிப்பு 3.- விருப்பத்திற்குரிய தமிழ்/ ஆங்கிலம்/ சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத் திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்படமாட்டாது.
(இ) பின்வரும் தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் :
* அரசாங்க அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத் தில் கணனி டிப்ளோமா கற்கைநெறியை ஒரு வருடத்திற்கு குறை யாமல் முடித்திருந்தால்
* உயர்தர விஞ்ஞான பிரிவில் சித்தியடைந்ததுடன் மின்னியல் விஞ்ஞானத்தில் 2 வருடத்திற்கு குறையாத கற்கைநெறியை அரசினால் அல்லது அரசினால் அங்கீ கரிக்கப்பட்ட நிறுவனத் தில் முடித்திருப்பதுடன் இத்துறை யில் 2 வருடத்திற்கு குறை யாத அனுபவமும் இருத்தல் வேண்டும்.
* தேசிய டிப்ளோமா கற்கைநெறி அல்லது வாகனம் சம்பந்த மான தொழில்நுட்ப அறிவு கற்கைநெறி காலம் 4 வருடங்கள் அரசினால் அல்லது அரசினால் அங்கீகரிக்கப் பட்ட நிறுவனத் தில் முடித்திருப்பதுடன் குறைந்தது இத் துறையில் 3 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
(ஈ) பௌதிகத் தகைமைகள் :
உயரம் : 5 அடி 6 அங்குலம் (ஆகக் குறைந்தது)
மார்பு : 32 அங்குலம் ஆகக் குறைந்தது (வெளிச் சுவா சத்தின்போது)
குறிப்பு 1.- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட் டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டி யுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங் கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதிக தகைமை- கள் குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையின்படி தகைமை பெறுவர்.
(உ) பார்வை தொடர்பான தேவை: ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/ 6 ஆகவும் மற்றைய கண்ணின் பார்வை 6/18 ஆக வும் இருப்பின் ஏற்றுக் கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரண மாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருதண்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.
(ஊ) பிற தகைமைகள் :
விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விவாகமானவர்களாகக் கருதப்படுவர்.) மற்றைய தகைமைகளை உடைய ஏற்கனவே பொலிஸ் திணைக் களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் மற்றும் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்களுக்கும் (SA) இது ஏற்புடையதாகாது.

5. ஆட்சேர்ப்பு முறை.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் பொலிஸ் திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஆரம்பத் தகைமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர் கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிகாண் பரீட்சையில் பங்குபற்ற லாம். அதாவது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.- விண்ணப்பதாரர்-
(1) மீற்றர் 1500 I - 6 நிமிடம் 20 வினாடிகளில் தொடர்ந்து ஓடி முடிக்க வேண்டும்.
(2) சிற் அப்ஸ் (Situps) - 30 வினாடிகளில் 15 தரம்
(3) டிப்ஸ் (Dips) - 30 வினாடிகளில் 15 தரம்
(4) ஸ்கொட்ஸ் திறஸ் (Scott thrush) - 30 வினாடிகளில் 20 தரம் பௌதிகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40… அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர் கள் மாத்திரம் எழுத்துமூலப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.
எழுத்துப் பரீட்சை :
(i) எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :-
* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விட யம் தொடர்பாக கட்டுரை எழுதுதல் ஞ
* பொது அறிவும் பொது நுண்ணறிவும் (01 மணித்தியாலம்.)

6. வைத்தியப் பரிசோதனை.- முன்னுரிமை பட்டியல் மற்றும் திறமை ஒழுங்கிற்கு அமைவாக தெரிவுசெய்யப்படும் விண்ணப்ப தாரிகள் தமது நியமனத்திற்கு முன்னர் வைத்தியப் பரிசோத னைக்கு தோற்ற வேண்டும். பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

7. பின்னணி விசாரணைகள்.- (அ) விண்ணப்பதாரரின் நன்னடத் தையை உறுதிப்படுத்த அவரின், அவரின் நெருங்கிய உறவினர் கள், மற்றும் நண்பர்களின் நன்னடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப் பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.
(ஆ) விண்ணப்பதாரி பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட் டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

8. அரச மொழி தேர்ச்சிக் கொள்கையை அமுல்படுத்தல் :
பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 2007.04.28 ஆந் திகதிய 07/ 2007 என்ற இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட வர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிக மாக மற்றைய அரச கரும மொழியிலும் சேவையில் சேர்ந்த திகதி யில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.
2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தி யட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்பட்ட அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்படும் இரண்டாம் மட்ட பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.
நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்கள் குறித்த மொழியில் தேர்ச்சியடையும் வரை சம்பள ஏற்றம் நிறுத்திவைக்கப்படும்.

9. நியமனக் கொள்கைகள்.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூ தியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள் / தபுதாரர், அநாதை கள் ஓய்வூதிய திட்டத்திற்கு அங்கத்துவப்பணம் செலுத்துதல் வேண்டும்.

10. சேவை நிபந்தனைகள்.- (அ) இந்நியமனம் 3 ஆண்டு கால தகுதிகாண் அடிப்படையைக் கொண்டது.
(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந் தொழுக வேண்டும்.
(இ) அவர்கள் தாபனக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதி களில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரி னால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளி யிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவர்.
(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோ கத்தர்களும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தி யெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.
(உ) பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும்வரை திருமணம் செய்ய முடியாது. எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி ஐஐ இன் பிரகாரமும் மற்றும் 1952/ 2006 ஆம் இலக்க 2006.10.19 ஆந் திகதி 2007.08.09 (திருத்தப்பட்டது) ஆம் திகதியுடைய பொலிஸ்மா அதிபரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களை தெரிவித்து பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரத் துடன் திருமணம் செய்ய முடியும்.
(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடி வடை வதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் காலம்வரை அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகள் தொடர்பில் ஏற்பட்ட செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடல் வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக் கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்வதானது 1985 ஆம் ஆண் டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.
(எ) தகுதிகூர்நிலை உதவிப் பொலிஸ் பரிசோதகர்கள் பயிற்சி யினை ஆரம்பித்தவுடன் உடனடியாக 1693/ 2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற் றுக் கோவையினை பின்பற்றுவதாக பிரமாணம் செய்தல் வேண்டும்.
(ஏ) தகுதிகூர்நிலை உதவிப் பொலிஸ் பரிசோதகர் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/ 2004 ஆம் இலக்க சுற்றறிக்கை யின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/ சத்தியம் செய்ய வேண்டும்.
(ஒ) தகுதிகூர்நிலை உதவிப் பொலிஸ் பரிசோதகர் தனது பதவியை உறுதிப்படுத்தியபின், பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக் கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவர்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) வில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.
(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர் வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவ ணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங் கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது):-
(அ) பிறப்புச் சான்றிதழ்
(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது)
(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்.
(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்திற்குப் புறம்பாக பெற்ற சான்றிதழ்கள்.
(உ) சேவையில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்)
(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய் யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும்.
(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றி தழ்களது பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத் திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங் களை நேரடியாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண் ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ண தாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது.
குறிப்பு.- பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்படமாட்டாது.

**பொலிஸ் மா அதிபர், பொலிஸ் தலைமையகம், கொழும்பு 01.**

## மாதிரி விண்ணப்பப்படிவம்

இலங்கை பொலிஸ் திணைக்களம்
உதவிப் பொலிஸ் பரிசோதகர் பதவி - விசேட அதிரடிப்படை

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்ப தாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல்வேண்டும்)
(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :....................................
(இ) விண்ணப்பிக்கும் பதவி :....................................
2. தேசிய அடையாள அட்டை இல. :.................................... (பிரதியை இணைக்கவும்)
3. தந்தையின் முழுப் பெயர் :....................................
4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :....................................
பிறந்த இடத்திற்குரிய பொலிஸ் நிலையம் -
மாகாணம் :....................................
5. (அ) தற்போதைய முகவரி :....................................
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :........
....................................
(இ) நிரந்தர முகவரி :....................................
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :....................
(உ) நிரந்தர முகவரிக்குரிய தேர்தல் மாவட்டம் :....................
(ஊ) நிரந்தர முகவரிக்குரிய கிராம சேவையாளரின் பிரிவு :
....................................
பிரதேச செயலாளர் :....................................
(எ) தொலைபேசி இலக்கம் (வசிப்பிடம்) :....................,
கையடக்க தொலைபேசி இல. :....................................
6. (அ) தேசிய இனம் :....................................
(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரஜையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழ் பிரதியை இணைக்கவும்) :....................
(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருப வர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-
(1) விண்ணப்பதாரர் :....................................
(2) விண்ணப்பதாரரின் தந்தை :....................................
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழி பாட்டன் :....................
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :....................
7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :....................................
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)
வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-
வருடங்கள் :................, மாதங்கள் :.............., நாட்கள் :................
8. உயரம் : அடி :........, அங்குலம் :............, மார்பு : அங்குலம் ..........,
9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :....................
10. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :....................................
11. திருமணம் ஆனவரா/ திருமணம் ஆகாதவரா ? :....................
12. (அ) தற்போது செய்யும் தொழில் :....................................
(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :.............
13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/ தகைமைகள் உண்டா
:....................................
14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-
(அ) ....................................
(ஆ) ....................................
15. (அ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையின் ஏதாவது பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்ததுண்டா? ஆம் எனின் அது தொடர் பான விபரங்களைத் தருக :.................... (7 ஆம் பக்கம் பார்க்க)
(ஆ) நீங்கள் இதற்கு முன்னர் நிரந்தர பொலிஸ் அல்லது பொலிஸ் உப சேவையில் கடமையாற்றியுள்ளீரா? ஆம் எனின் அப்பதவி யில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக ?
.................................... (7 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல்: 3 பொலிஸ் விசாரணைக் குழுக்கள்

மன்னார் நீதிமன்றக் கட்டிடம் மீதான தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு சந்தேக நபர்களை கைதுசெய்யும் முகமாக வவுனியா உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் மூன்று விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

நீதிமன்றக் கட்டிடத்தொகுதி மீதான தாக்குதலின்போது வன்முறைகளைத் தூண்டியதாக கருதப்படும் சந்தேக நபர்களை விசாரணை மேற்கொண்டு கைதுசெய்வதற்கும் இத்தாக்குதலில் ஈடுபட்டார்களெனக் கருதப்படும் சந்தேக நபர்களை விசாரணை மேற்கொண்டு கைதுசெய்வதற்கும் 20 பேர் கொண்ட 3 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக வவுனியா உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜீ.எம்.சோமரத்தின நேற்று தெரிவித்தார்.

இக்குழுக்களில் மூன்று பொலிஸ் பரிசோதகர்கள் உட்பட இரண்டு உதவி பொலிஸ் பரிசோதகர்களும் அடங்கியுள்ளனர்.



நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வில் பரிசில் வழங்குவதை காணலாம்.

(மாவிட்டபுரம் நிருபர்)

# கைதடியில் நோர்வே தமிழ் பெண்ணின் பரத நாட்டியம்

(மாவிட்டபுரம்)

நோர்வே நாட்டின் நர்த்தன காவியா நடனப் பள்ளியின் இயக்குநர் "கலையரசி"

கல்யாணி தயாபரனின் மாணவியும் கைதடியூரைச் சேர்ந்தவர்களும் தற்போது

நோர்வேயில் வசிக்கின்றவர்களுமாகிய சிறிதரன் தம்பதியினரின் புதல்வியும்

ஆகிய அபிநயா சேதா இராஜதுரையின் பரத நாட்டிய அரங்கேற்றம் 21 ஆம் திகதி

சனிக்கிழமை இரவு கைதடி சரஸ்வதி கலையரங்கில் இடம்பெற்றது. இந்நிகழ்வில்

நோர்வே கவிஞர் சின்னத்துரை உமைபாலன், இலங்கையின் முன்னணி பரதக் கலை

ஆசிரியர் கொக்குவில் கலாபவன இயக்குநர் "கலாகீர்த்தி" சாந்தினி சிவநேசன்,

உரும்பிராய் கலைக்கோவில் நடனப்பள்ளி இயக்குநர் நடனத்துறை முதன்மை

ஆசிரியர் "நடனபாரதி" பத்மினி செல்வேந்திரகுமார் ஆகியோர் கௌரவ

விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

# அமெரிக்கத் தூதுவர் யாழ். ஆயருடன் சந்திப்பு



நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றிசியா புட்டேனிஸ் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகத்தை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

போருக்குப்பின்னரான காலப் பகுதியில் மக்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள் மற்றும் உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக மீள்குடியேற்றம் செய்வதில் உள்ள தாமதங்கள் மற்றும் இராணுவ முகாம்கள் மற்றும் கல்வி புற்றிய விடயங்கள் பற்றி தூதுவர் கேட்டதாக யாழ் ஆயர் தெரிவித்திருந்தார்.

தனிப்பட்ட நபர்கள் மீதான தாக்குதல்கள் அண்மைக் காலங்களாக அதிகரித்துள்ளதால் தற்போது யாழ்.மாவட்டத்தில் வாழ்கின்ற மக்கள் அச்ச உணர்வுடன் வாழ்வதாகவும் வீதிச் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டிருந்த போதும் சில இடங்களில் இராணுவப் பிரசன்னங்கள் அதிகமாக காணப்படுவதாக தான் விளக்கமளித்ததாக ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் கல்வியின் செயற்பாடு, அபிவிருத்தி போன்றவை தொடர்பாக கலந்துரையாடியபோது, நகர்ப்புற கல்வி தற்போது அபிவிருத்தி கண்டு வரும் நிலையில் கிராமப் புறங்களின் கல்வி நிலை மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதாக தான் எடுத்துக் கூறியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அமெரிக்கத் தூதுவர் தன்னிடம் கருத்துத் தெரிவிக்கையில், தமிழ் மக்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு இலங்கை அரசாங்கம் வழங்கவேண்டும் என்பதில் அமெரிக்கா விருப்பத்தோடு இருப்பதாகக் கூறினார் எனவும் ஆயர் குறிப்பிட்டார்.

# இந்திய அணிக்கும் அதன் தலைவருக்கும் அபராதம்

ஹம்பாந்தோட்டை சூரியவெவ மைதானத்தில் நேற்று முன்தினம் (21) நடைபெற்ற இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி யில் சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் விதிமுறைகளை மீறி செயற்பட்டமைக்காக இந்திய அணிக்கும் அதன் தலைவர் மஹேந்திர சிங் தோனிக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இலங்கை அணிக்கு எதிரான நேற்றைய போட்டியில் மெதுவாக பந்து வீசியதாக இந்திய அணி மீதும் அதன் தலைவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன்படி நேற்றைய போட்டியின் மத்தியஸ்த்தராக கடமையாற்றிய கிரிஸ் ப்ரோட் இந்திய அணி தலைவருக்கு போட்டிக் கொடுப்பனவில் இருந்து 20 சதவீத அபராதமும் அதன் வீரர்களுக்கு 10 சதவீத அபராதமும் விதித்துள்ளார்.

# நெடுந்தீவிலும் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள்

## இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

சரியான பயனாளிகளைத் தெரிவுசெய்து தரும் பட்சத்தில் நெடுந்தீவிலும் இந்திய வீடமைப்புத் திட்டத்தின்கீழ் வீடுகளை அமைக்க உதவ முடியும் என இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் காந்தா நெடுந்தீவு மக்களுக்குத் தெரிவித்தார். அத்துடன் இந்திய இழுவைப் படகுகளின் பிரச்சினைகள் குறித்தும் தமது அரசாங்கத்துடன் தொடர்பு கொள்வதாகவும் கூறினார்.

நெடுந்தீவுக்கு கடந்த சனிக்கிழமை வருகைதந்த இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் காந்தாவுக்கு நெடுந்தீவு துறைமுகத்தில் நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ. சிறி, கடற்படை அதிகாரி ஈ.என். எக்கநாயக்க பெயரில் அதிகாரி எக்கநாயக்கா, பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஷியன் உட்பட நெடுந்தீவு மக்கள் வரவேற்பளித்தனர் அதைத் தொடர்ந்து அங்குள்ள சரித்திர முக்கியத்துவம் மிக்க இடங்களைப் பார்வையிட்ட பின்னர் மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்த ஸ்தானிகரிடம் மக்கள் தமது குறைகளையும் இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்புக்கள் பெறக்கூடியதான தொழிற்சாலைகள் போன்றவற்றை அமைத்து உதவுமாறும் கேட்டுக் கொண்டனர்.

மக்களின் கோரிக் கைகளைச் செவிமடுத்த உயர் ஸ்தானிகர் அவை பற்றி முடிந்த வரை உதவுவதற்கான முயற்சி களை மேற்கொள்வதாகத் தெரிவித்தார்.

(ப)

# நல்லூர் திருவிழா கடமையில் 600 பொலிசார்

வலிகாமம்

நல்லூர் திருவிழாஉற்சவத்தில் கடமையாற்றவிசேடமாகஅறுநூறு பொலிசார் ஆலய சுற்றாடலில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். ஆலய உற் சவகாலத்தில் இடம் பெறக் கூடிய திருட்டுக்கள்குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதுடன் வீதிகளில் உள்ளதடைநிலையங்களில் கடமையாற்றல் உட்பட பல்வேறுகடமைகளிலும் பொலிசார் ஈடுபடவுள்ளார்கள்.

உற்சவகாலத்தில் சிவில்உடையிலும் சீருடையிலும் பொலிசார் கடமையாற்றவதுடன் பெண் பொலிசாரும் இப் பணியில் ஈடுபடுத்தப் படவுள்ளார்கள்.

குறிப்பாகப்பெண்கள் தமது பெறுமதிமிக்கதங்கநகைகளை- அணிந்துவருவதைதவிர்த்துக் கொள்வதுடன் பெறுமதிமிக்கஆவணங்களையும் ஆலயசுற்றாடலுக்குள் கொண்டுவருவதைத்தவிர்ப்பது தேவையற்றமுறையில் ஏற்படக் கூடியசிரமங்களைதவிர்க்கக் கூடியதாக இருக்கும்.

ஆலயசுற்றாடலிலும் விசேடமாக பொலிசார் சிவில் உடையில் கடமையாற்றுவதுடன் வீதிகளில் செல்லும் போதும் வரும்போதும் மக்களுக்கு ஏற்படக் கூடியசிரமங்களைதவிர்க்கும் முகமாகவும் பொலிசார் நடவடிக்கைகளைஎடுக்கவுள்ளதாகவும் யாழ் மாவட்டபிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக்பெரேராதெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ் மா.அதிபர் அலுவலகத்தில் இடம் பெற்றஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போது இந்ததகவல்கள் தெரிவிக்கப்பட்டது.



விளையாட்டுத்துறையில் சாதனை நிகழ்த்தி வரும் பருத்தித்துறை எஸ்.செல்வநாயகத்திற்கு வடமராட்சி வடக்குப் பிரதேச கலாசார பேரவை "கலைப்பரிதி" பட்டம் வழங்கிக். கௌரவித்தது. கலைப்பரிதி பட்டத்தை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் வழங்கிக் கௌரவிக்கிறார். படத்தில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெயசீலனும் காணப்படுகிறார்.

# யாழ்.மத்தியகல்லூரியில் விசேட கல்வி அலகு

மாவிட்டபுரம்

யாழ்.மாவட்டத்தில் உள்ளதேசியப்பாடசாலைகளில் முதல் தடவையாக யாழ் மத்திய கல்லூரியில் விசேட கல்வி அலகு புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விசேட கல்வித்துறையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் சுரேந்திரன், கொலின்ஸ் ஆகியவர்களை நியமித்துள்ளது.

ஆசிரியர்களின் வேண்டுகோளும் அதிபரின் பெரு முயற்சியினாலும் விசேடகல்வி அலகு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விசேடகல்வி அலகின் ஆரம்பம் தொடர்பாக கல்லூரி அதிபர் எஸ். கே. எழில்வேந்தன் குறிப்பிடும் போது விசேட தேவையுடைய மாண வர்கள் புதிதாக் இணைத்துக் கொள்ளப் படவுள்ளனர். இந்த மாணவர்களை இக் கல்லூரியில் இணைத்துக் கொள்ள முடியும்.

இவர்களுக்கு பயிற்றப்பட்ட அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பித்தல் செயற்பாடு கள் வழங்கப்படும்.

இவ்விசேட கல்வி அலகினை வளப்படுத்துவதற்கான அனைத்து செயற்பாடுகளையும் கல்வியமைச்சுடனும்கல்வித்திணைக் களத்துடனும் இணைந்து வளர்ச்சியயைச் செய்வதற்கானஅனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

விசேட கல்வி தேவைப்படும் மாணவர் களின் தேவையறிந்து யாழ். மத்திய கல்லூரியில் விசேட கல்வி அலகு ஆரம்பிக்கப்பட்டமை தொடப்பாக கல்வியியலாளர்களும் கல்விச் சமூகத்தினரும் ஆதரவை தெரிவிக்கின்றனர்.

# தபால் மூல வாக்களிப்பு ஓகஸ்ட் 27, 28 இல்



கிழக்கு, வடமத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைகளுக்கான தபால்மூல வாக்களிப்பு ஓகஸ்ட் 27, 28 ஆம் திகதிகளில் நடைபெறுமென தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் 8 ஆம் திகதி மேற்படி மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது

தமிழ்நாதம்
Thamil Naatham
ஜூலை மாதம் 23ஆம் திகதி திங்கட்கிழமை

# சைமன், ஞானேந்திரன், முஹமத் 83இல் கடையைக் கொள்ளையிட்டனர்

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கு எதிராக அன்றைய அரசாங்கத்தின் அனுசரணையுடனும், ஆதரவுடனும் இன சங்காரம் கட்டவிழ்த்து விடுவதற்குக் கால்கோளிட்ட தினம். நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் 1983ஆம் ஆண்டு வரை தமிழ் மக்களுக்கு எதிராக பாரிய ஆறு தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. 1956, 1958, 1971, 1977, 1979, 1983 ஆகிய ஆண்டுகளில் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. 1983ஆம் ஆண்டுத் தாக்குதல்தான் இலங்கை இனப் பிரச்சினையைச் சர்வதேச மயப்படுத்தியது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களும், பாதிக்கப்படாத தமிழ் மக்களுமாகச் சுமார் எட்டு இலட்சம் பேர் இலங்கையை விட்டு வேறு நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தார்கள். பல ஆயிரக்கணக்கான மூளைசாலிகளும் வெளியேறினார்கள். அன்று வேகம் பெற்ற ஆயுதப் போராட்டம் முடிந்து, மூன்று வருடங்களாகி விட்டன. ஆனாலும் அதற்குக் காரணமான மூலப் பிரச்சினையின் தெறிப்புகள் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் இன்னமும் எதிரொலித்துக் கொண்டே இருக்கின்றன.

1983ஆம் ஆண்டின் இன சங்காரத்துக்குப் பிள்ளையார் சுழி போட்டவர்களே தமிழ் இளைஞர்கள்தான். யாழ்ப்பாணம், திருநெல்வேலி தபால் கட்டையடிச் சந்தியில் பதுங்கியிருந்த தமிழ் இளைஞர்கள், ரோந்து சென்று கொண்டிருந்த சிங்களவர்களை மட்டுமே கொண்ட இராணுவ வாகனத் தொடரணி மீது நடத்திய தாக்குதலே இந்த இன சங்காரத்துக்கு மூல காரணியாகியது. இது ஆயுத [illegible] முகிழ்த்த சூரசங்காரம். இதன் எதிரொலியாக [illegible]களில் நரவேட்டை கட்டவிழ்த்து விடப்பட்டது. [illegible] கிட்டத்தட்ட முப்பது வருடங்கள் நீடிப்பதற்கு [illegible]யது.

வெறுமனே தமிழ் மக்கள்தான் [illegible]கள் என்பது வெறும் சப்பைக்கட்டுவாதம். 83இல் தமிழ் மக்கள்தான் பலியெடுக்கப்பட்டார்கள். அதிலும் அப்பாவிகளே பலியெடுக்கப்பட்டார்கள். அப்பாவித் தமிழர்களின் பலியெடுப்பைக் கண்டு ஆர்த்தெழுந்த தமிழ் இளைஞர்களும் அப்பாவித் தமிழர்களையும் வேட்டையாடியிருக்கிறார்கள். அப்பாவிச் சிங்களவர்களையும் வேட்டையாடியிருக்கிறார்கள். வடக்கு, கிழக்கின் எல்லைக் கிராமங்களைக் கேட்டால் அப்பாவிச் சிங்களவர்கள் பலியெடுக்கப்பட்ட ஆயிரக் கணக்கான கண்ணீர்க் கதைகளைக் கூறும். வடக்கிலிருந்து 1990இல் விரட்டப்பட்ட 75 ஆயிரம் முஸ்லிம்களும் சோகத்தின் சுமைதாங்கிகள்தான்.

மொழி வெறும் ஊடகம். மனிதன் தமக்கிடையே தொடர்பாடல்களை மேற்கொள்வதற்கான ஒரு சாதனம். மொழியும், மதமும், இனமும் துப்பாக்கிகளையும், ஆயுதங்களையும் வழி நடத்தியதால் அதுவே பல நாடுகளின் கண்ணீர்க் கதைகளுக்குக் காரணமாகியிருக்கிறது. இது இலங்கையின் வரலாறு மட்டுமல்ல, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மொஸாம்பிக், சூடான், தன்சானியா உள்ளிட்ட பல நாடுகளிலும் இதே கதைதான். மொழியும், இனமும், மதமும் மூர்க்கம் பெற்றால் மனிதாபிமானமும், மனித நேயமும் தலை குனியும்.

சந்தர்ப்பவாத மற்றும் இனவெறி பிடித்த அரசியல்வாதிகளும் நெறி பிறழ்ந்த ஊடகங்களும், இன சௌஜன்யத்துக்கு வாய்க்கரிசியை அள்ளிப் போட்டிருக்கின்றன. இனத்துவ மேலாண்மை என்பது இல்லையென்று போனால், இன சௌஜன்யத்துக்குக் கணிசமான பங்களிக்க முடியும். ஆயுதமேந்தியவர்களை அரங்குக் கொண்டு வந்ததில் சிங்கள இனவாதிகளுக்கு மட்டுமல்ல, தமிழ் இனவாதிகளுக்கும் கணிசமான பங்கு உண்டு. எப்போதுமே இனவாதம் போன்ற குறுகிய அம்சங்கள் ஒன்றிலொன்று தங்கி வாழ்பவையாகும், தங்கி வளர்பவையுமாகும்.

டி.எஸ். சேனநாயக்கா அரசு ஆரம்பித்து வைத்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், 1956இன் சிங்களம் மட்டும் சட்டம், அவ்வப்போது தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்கள், மொழிவாரித் தரப்படுத்தல் போன்ற இன்னோரன்ன அம்சங்கள் இனப் பகைமையின் ஆணிவேர்கள்தான்.

1983 ஜூலை இறுதி வாரத்தில் சுமார் நூறு மணித்தியாலங்களுக்கு மேலாக இரத்த ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அதற்குப் பின்னர்தான் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அதுவும் நான்கு நிமிடங்கள், ஐம்பது செக்கன்டுகள் மட்டுமே உரையாற்றினார். அவர் சொன்னார்: "பெரும்பான்மை இன மக்களான சிங்களவர்களின் உரிமைகளும், வசதிகளும் பாதுகாக்கப்படும். நாட்டுப் பிரிவினை பற்றிப் பேசுபவர்களின் சிவில் உரிமைகள் பறிக்கப்படும். அவர்கள் தமது பணிகளைத் தொடரவோ, அல்லது எந்த அமைப்புகளிலுமே இணைந்து கொள்ளவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள். நாட்டில் பிரிவினையை வலியுறுத்தும் கட்சிகள் தடை செய்யப்படும். நாட்டைப் பிரிக்க எடுக்கப்படும் சகல முயற்சிகளும் முறியடிக்கப்படும்" - ஜே.ஆரின் இரத்தினச் சுருக்கமான பேச்சு இதுதான்.

இந்த இனசங்காரம் பற்றி 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் கீழ்க்கண்டவாறு சொன்னார்." தமிழ் மக்களின் மனதில் பாதுகாப்பில்லையே என்ற உணர்வை இந்த இனசங்காரம் ஏற்படுத்தியிருக்கிறது" - இப்படிச் சொன்ன அமிர் இதற்குச் சில வருடங்களுக்கு முன்னர் இப்படியும் சொன்னார். "தமிழ் இளைஞர்களின் கைகளில்தான் இன விடுதலை இருக்கிறது"

இவற்றையெல்லாம் பார்க்கும்போது ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது. ஜூலை இனசங்காரத்தின்போது புறக்கோட்டையிலுள்ள தமிழர் ஒருவரின் வர்த்தக நிலையத்தைக் கொள்ளையடித்த மூவர் கைது செய்யப்பட்டிருந்தனர். சைமன், ஞானேந்திரன், முஹம்மத் ஆகிய மூவருமே இவர்கள். கொள்ளையடிப்பதில் மூவினத்தவரும் ஐக்கியப்பட்டிருந்தனர். ,

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2219506, பக்ஸ்: 021-2219505
e-mail: tnaatham@yahoo.com

# 1983 ஜூலை இனசங்காரம்

## - அரசாங்கம்
## - அரசியந்திரம்
## - தமிழ் ஆயுதக்குழுக்கள்
## - இனவொழிப்பு

ஒரு பார்வை

எஸ்.அருளானந்தன்

அமெரிக்க ஏகாதிபத்தியத்தைக் கதிகலங்க வைத்த அந்த ஒன்ப[illegible] யின் [illegible] காலின் வேட்டைக்[illegible] [illegible]ட்நாம் ஆக்கப்பட்டிருந்த காலமது. ட்ராங் பாங் என்ற இடத்தில் அமெரிக்க விமானங்கள் வீசிய நாபாம் குண்டு வீச்சுகளுக்குள் சிக்கிப் பல நூற்றுக்கணக்கானவர்கள் பலியெடுக்கப்பட்ட கோரச் சம்பவம் அது. இந்த அகோரத்திலிருந்தும் நெருப்பு வேகரத்திலிருந்தும் உயிர் தப்புவதற்காக அவள் அலறியடித்தபடி ஓடிக் கொண்டிருந்தாள். அவள் அணிந்திருந்த ஆடை எரிந்துவிட்டது. நிர்வாணமாகவே தப்பியோடிக் கொண்டிருந்தாள் கிம்துக். "நுவாங், நுவாங்" (எரியுது, எரியுது) என்று கத்தியபடியே ஓடி வந்தாள். வியட்நாமிய ஊடகவியலாளன் ஒருவனின் கமராவிற்குள் இந்த கோரக்காட்சி பிடிக்கப்பட்டது. இன்னும் ஓடிக்கொண்டிருந்த சிறுமி மீது தண்ணீரை ஊற்றி நிறுத்தி, அவளைத் தனது வாகனத்தில் ஏற்றி வைத்திய சாலையில் கொண்டு சென்று அனுமதித்தான். அவனது பெயர் நிக்உற். இந்தப் புகைப்படம் பலத்த கெடுபிடிகளையும் தடைகளையும் தாண்டி உலகெங்குமுள்ள ஊடகங்களில் வலம் வந்தது. உலகெங்குமுள்ள மனச்சாட்சியுள்ள மனிதர்கள் மனதை இது தொட்டது. அமெரிக்கா நிகழ்த்தி வந்த கொடூரத்தை அம்மணமாகவே அம்பலப்படுத்தியது இந்தச் சிறுமியின் நிர்வாணப் படம். 1972ஆம் ஆண்டு ஜூன் 8ஆம் திகதி இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டது. கருத்துருவாக்கத்தில் ஊடகங்களுக்கு இருக்கக்கூடிய அதீத சக்தியை இது வெளிக்காட்டியது.

இலங்கையில் சுமார் மூன்று தசாப்த காலம் யுத்தம் இடம்பெற்றிருக்கிறது. உயிரோடு கொளுத்தப்பட்ட மூவின மக்களும் இதில் கொடூரத்தின் இரத்த சாட்சிகளாகிப் போயிருக்கிறார்கள். யுத்தத்தில் ஈடுபட்ட இருதரப்புக்களுமே மனித வேட்டை ஆடியிருக்கிறது.

1983 இல் இடம்பெற்ற ஆடி இனசங்காரத்தில் உயிரோடு கொளுத்தப்பட்ட தமிழர்கள்

இந்த அடாவடித் [illegible] உதப்பிவிட்டது [illegible] என்பதை மறுக்க முடியாது. நிர்வாணமாக ஓடிக் கொண்டிருந்த அந்த வியட்நாமியச் சிறுமியின் புகைப்படத்தைப் போல, நிர்வாணமாக்கப்பட்டுத் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்ட தமிழ்மகன் ஒருவனின் புகைப்படமும் 1983இல் வெளிவந்தது.

கொழும்பு பொறளையிலுள்ள பஸ் தரிப்பிடத்தில் இந்தக் கறுப்பு வெள்ளைப் புகைப்படம் பிடிக்கப்பட்டது. பஸ் தரிப்பிடத்திலுள்ள சீமெந்து இருப்பிடத்தில் அந்த நிர்வாணமாக்கப்பட்ட தமிழன் இருக்கிறான். அவனைச் சுற்றி நிற்கும் சில குண்டர்களின் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்காக அவன் தலையை இரண்டு கைகளாலும் பொத்திக் கொண்டிருக்கிறான். அவன் கொல்லப்பட்டிருப்பான் என்பது சர்வ நிச்சயம். கொடூரத்தை அம்மணமாகப் படம் பிடித்துக் காட்டும் இந்தப் புகைப்படத்தைப் பிடித்தவர் ஒரு சிங்கள இளைஞர். அவரது பெயர் சந்திரகுப்த அமரசிங்க. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்டுவந்த "அத்த" என்ற சிங்களப் பத்திரிகையின் புகைப்படப்பிடிப்பாளர் அவர். தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து சில பத்து மீற்றர்கள் அப்பால்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைக் காரியாலயம் அமைந்திருந்தது. பத்திரிகை அலுவலகமும் அங்குதான் இருந்தது.

காலில் இரப்பர் செருப்பு. முகத்தில் தாடி. தோளில் தொங்கிக் கொண்டிருந்த சீலைத் துணியாலான பையில் அவனது படப்பிடிப்புக் கமரா இருந்தது. புகைப்படங்கள் எடுக்கக்கூடிய செல்லிடத் தொலைபேசிகளோ, நவீன கருவிகளோ இல்லாத



கொழும்பு, பொரளையில் தமிழ் இளைஞர் ஒருவர் 1983 இனசங்காரத்தின்போது தாக்கப்படும் காட்சி

காலம் அது. பொரளை, கனத்தைச் சுடலையிலிருந்ததுதான் 1983 இனவெறித் தீ நாக்குகள் பரவத் தொடங்கின. 1983ஆம் ஆண்டு ஜூலை 24 அந்தக் கரிநாள்.

யாழ்ப்பாணம்-திருநெல்வேலி தபால்கட்டையடிச் சந்தியில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த குழுவொன்று பதுங்கியிருந்தது. இக் குழுவில் பிரபாகரன், செல்லக்கிளி உட்படப் பத்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் இருந்தனர். இரவு நேரம் ரோந்து நடவடிக்கையில் ஈடுட்டிருந்த இராணுவ அணியை எதிர்பார்த்தே இவர்கள் பதுங்கியிருந்தனர். இராணுவத்தின் மென்ரக படைப்பிரிவைச் சேர்ந்த முதலாவது அணி சிப்பாய்களை ஏற்றிய வாகனத் தொடரணி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது. ஒரு ஜீப்பும், ஒரு ட்ரக்கும்தான் இந்தத் தொடரணியில் சென்று கொண்டிருந்தன. 14 சிப்பாய்கள் இந்த வாகனங்களில் பயணம் செய்தனர். முன்னால் சென்றுகொண்டிருந்த ஜீப்பில் ஆறு சிப்பாய்கள். பின்னால் சென்று கொண்டிருந்த ட்ரக்கில் எட்டுச் சிப்பாய்கள் மாதகலிலிருந்து தமது படைத்தளத்திலிருந்து புறப்பட்ட இந்த ரோந்து அணி, குருநகர் இராணுவ முகாமுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தது. யாழ்ப்பாணச் சந்தை, நாகவிகாரை, நல்லூர், கோப்பாய், உரும்பிராய், கல்வியங்காடு, திருநெல்வேலி வழியாக யாழ்.நகரை நோக்கி மீண்டும் இராணுவ ரோந்து அணி சென்று கொண்டிருந்தது. திருநெல்வேலியில் கண்ணிவெடிகளைப் புதைத்துவிட்டுப் புலிகளின் அணி பதுங்கியிருந்தது. தபால்கட்டையடியை இராணுவ தொடரணி நெருங்கியதும் பலத்த சத்தத்துடன் கண்ணிவெடிகள் வெடித்துச் சிதறின. முன்னால் சென்று கொண்டிருந்த ஜீப்பிலிருந்த ஆறு சிப்பாய்களும் உடல் சிதறி மாண்டார்கள். பின்னால் வந்து கொண்டிருந்த ட்ரக்கிலிருந்து எட்டு சிப்பாய்களில் ஏழுபேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஒரு சிப்பாய் மட்டுமே உயிர் தப்பினார். அவனது பெயர் கோப்ரல் ஜே.ஆர்.ஏ.யு.பெரேரா.

(7ஆம் பக்கம் பார்க்க)

# 1983 ஜூலை இனசங்காரம்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

காயங்களிலிருந்து இரத்தம் பீறிட கோண்டாவில் பஸ்டிப்போவை நோக்கி அவன் ஓடினான். அங்கிருந்து கொண்டே மாதகல் இராணுவ முகாமுக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தான். அப்போது கட்டளைத் தளபதியாக இருந்தவர் பிரிகேடியர் பல்தசார்.

யாழ்ப்பாண படை முகாம்களிலிருந்து புறப்பட்ட படையினர் நடத்திய பதில் தாக்குதலில் சுமார் 39 அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டனர். திருநெல்வேலியில் புலிகள் நடத்திய தாக்குதலை, பல்வேறு வகைகளில் முதன்முதலாக நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவமென்று வர்ணிக்கலாம். தமிழீழ ஆயுதக் குழுவொன்று முதன்முதலாக நடத்திய கண்ணிவெடித் தாக்குதல் இது.

தைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் மருமகன். இவரைப் புல் (எருமை) வீரதுங்கா என்றும் அழைப்பதுண்டு. ஆறு மாதங்களுக்குள் வடக்கிலிருந்து பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட வேண்டுமென்ற ஜே.ஆரின் உத்தரவோடு 1979ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டவர் இவர். யாழ்ப்பாணத்திற்கு வந்ததுமே ஆயுததாரிகளெனச் சந்தேகிக்கப்பட்ட தமிழ் இளைஞர்களைச் சுட்டுக்கொன்று வீதியோரங்களில் வீசியவர் இவர்.

ஜூலை 24ஆம் திகதி இரவு 9.30 மணிக்கே பொலித்தீன் பைகளில் சுற்றப்பட்ட படையினரின் சடலங்களும் சடலச் சிதைவுகளும் கொழும்பை வந்தடைந்தன. மாலை நான்கு மணிக்கு இரத்மலானை விமான நிலையத்துக்குச் சடலங்களைக் கொண்டுவர

தேடி தாக்கியது. வாக்காளர் இடாப்புகளை வைத்துக்கொண்டு தமிழ் மக்கள் வாழும் விலாசங்கள் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டன. அமைச்சர்கள் சிறில், மத்தியுவும் காமினி திசாநாயக்கவுமே இதற்கான சூத்திரதாரிகளென்று பரவலாகப் பேசப்பட்டது. உயிரோடு கூடத் தமிழ் மக்கள் பெற்றோல் ஊற்றிக் கொழுத்தப்பட்டனர். பாலியல் வல்லுறவுகளும் இடம்பெற்றன. கொழும்பு, கம்பஹா, திருகோணமலை, அநுராதபுரம், நுவரெலியா உட்பட நாடெங்கும் காடைத்தனங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

தார்மீக ஆட்சி பற்றி வாய்கிழியக் கத்தியவர் ஜனாதிபதி ஜெயவர்த்தன. அவரின் தார்மீக ஆட்சி வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள்ளும் காடைத்தனத்தைக் கட்டவிழ்த்து விட்டது. சிறைச்சாலை உயரதிகாரிகளின் உதவியுடனும், ஆசீர்வாதத்துடனும் இரண்டு நாட்கள் தமிழ் அரசியல் கைதிகள் மீது தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன.



ஜூலை மாதம் 25ஆம் திகதி 35 தமிழ் அரசியல் கைதிகளும் 27ஆம் திகதி 18 பேரும் கொல்லப்பட்டனர். குத்தியும், வெட்டியும், கண்களைத் தோண்டியும் மிகக் கொடூரமான முறையில் இவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

நான்கு தினங்களுக்குப் பின்னர் ஜனாதிபதி ஜெயவர்த்தன நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். "பெரும்பான்மை இன மக்களான சிங்களவர்களின் உரிமைகளும், வசதிகளும் பாதுகாக்கப்படும்" என்று உறுதியளித்தார். நாடு பிரிவினை பற்றிப் பேசுபவர்களின் சிவில் உரிமைகள் பறிக்கப்படுமென்றும் அவர்கள் தமது தொழில்களைத் தொடரவோ அல்லது எந்த அமைப்புக்களிலும் இணைந்து கொள்ளவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் ஜே.ஆர். கூறினார். நாட்டில் பிரிவினையை வலியுறுத்தும் கட்சிகள் தடைசெய்யப்படுமென்றும், நாடு பிரிவினைக்கான சகல முயற்சிகளும் முறியடிக்கப்படுமென்றும் ஜே.ஆர். உறுதியளித்தார். அவர் நான்கு நிமிடங்கள் ஐம்பது செக்கன்டுகள் மட்டுமே உரையாற்றினார். பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைச் சாந்தப்படுத்தக்கூடிய ஒரு வார்த்தையைக் கூட ஜே.ஆர். கூறவில்லை. முழு உரையும் சிங்கள மக்களிடம் அனுதாபம் தேடும் வகையிலேயே அமைந்திருந்தது.

இராணுவத் தொடரணியொன்றின் மீது நடத்தப்பட்ட முதலாவது தாக்குதலும் இது. கொல்லப்பட்ட படையினரின் சடலங்களையும் சடலச் சிதைவுகளையும் பொலித்தீனில் சுற்றி முதன் முதலாக கொழும்புக்கு அனுப்பப்பட்ட சம்பவமும் இதுதான். செல்லக்கிளியோடு முரண்பட்டுக் கொண்டிருந்த பிரபாகரன் அவரைத் தீர்த்துக் கட்டுவதற்குப் போட்ட முதலாவது திட்டமும் இதுதான் என்றும் சொல்லப்பட்டது.

ஆயுதமேந்திய இளைஞர்களை அடக்கி அழிப்பதோடு அப்பாவித் தமிழர்களைப் பழிவாங்கத் துடித்த ஜே.ஆர்.அரசுக்குக் கிடைத்த முதலாவது பாரிய சந்தர்ப்பமும் இதுவாகும். முன்னால் ஜீப்பில் வந்து கொண்டிருந்த ஆறு சிப்பாய்களையும் கண்ணிவெடியே காவு கொண்டது. பின்னால் ட்ரக் வண்டியில் வந்து கொண்டிருந்த ஒன்பது சிப்பாய்களும் வண்டியிலிருந்து வெளியே குதித்தபோது பதுங்கியிருந்த புலிகள் சரமாரியாக வேட்டுகளைத் தீர்த்தனர். லெப்டினன்ட் குணவர்த்தனாவினதும் மூன்று சிப்பாய்களினதும் சடலங்களும் துண்டங்களாய்ச் சிதவடைந்தன.

இறந்த படைவீரர்கள் சிலரின் சடலங்கள் இனங்காண முடியாதபடி சிதைவுற்றிருந்ததால், அனைத்துச் சடலங்களையும் யாழ்ப்பாணத்திலேயே அடக்கம் செய்வதற்கு, ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு இராணுவ அதிகாரிகள் சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர். "எனது படைவீரர்கள் நாய்களைப் போல் சுட்டுத்தள்ளப்படுவதை நான் அனுமதிக்கமாட்டேன். அவர்களுக்குக் கௌரவமான இறுதி மரியாதை கொழும்பில் வழங்கப்பட வேண்டும்" என்று மேஜர் ஜெனரல் திஸ்ஸ வீரதுங்கா கூறுரைத்தார். இவர் அப்போ

ஏற்பாடாகியிருந்தது. ஆனால் பலாலி விமான நிலையத்திலிருந்து கொழும்புக்கு கொண்டு வரப்பட்ட சடலங்கள் பொரளை கனத்தை மயானத்தை வந்தடைய இரவு 9.30 மணியாகிவிட்டது. பொரளை, கனத்தை மயானத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெறுமென்ற தகவல் கசியத் தொடங்கியதும் மக்கள் வெள்ளம் அங்கு திரண்டது. ஐ.தே.க.வின் தொழிற்சங்கமான ஜாதிக சேவக சங்கமயவுக்கு அப்போது தலைவராக இருந்தவர் அமைச்சர் சிறில் மத்தியூ. அவர் கடைந்தெடுக்கப்பட்ட இனவெறியர். அவரது தொழிற்சங்கத்தைச் சேர்ந்த காடையர் கும்பல்களும் மயானத்தில் திரண்டிருந்தன. அப்போதைய பொலிஸ் மா அதிபர் ருத்ரா ராஜசிங்கம். சிரேஷ்ட பொலிஸ் சுப்ரிண்டன்ட் கபூர் உட்படப் பல உயரதிகாரிகளும் கோபாவேசம் கொண்ட கூட்டத்தினரால் தாக்கப்பட்டார்கள்.

பொரளை கனத்தை மயானத்துக்குச் சற்றுத் தொலைவிலுள்ள சைவக் கடையொன்றினை முதலில் காடையர் கும்பல் தாக்கிச் சேதப்படுத்தியது. அங்கிருந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டதோடு கடை தீக்கிரையாக்கவும் பட்டது. இந்த அக்கிரமங்களைக் கண்டும் காணாதவர் போல் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன கண்ணை மூடிக்கொண்டார். நாட்டின் பல பகுதிகளில் தமிழ் மக்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்து மூன்று, நான்கு தினங்களுக்கு இடம்பெற்றன. வெளிமாவட்டங்களிலிருந்து அரசாங்க திணைக்கள வாகனங்களில் காடையர்கள் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டனர். கைகளில் பெற்றோல் தகரங்களுடனும் தாக்குதலுக்குத் தேவையான வேறு ஆயுதங்களுடனும் காடையர் கும்பல் தமிழ் மக்களின் வீடுகளைத் தேடித்

இந்த இன சங்காரத்தில் 350 தமிழர்கள் கொல்லப்பட்டனரென்றும், 18 ஆயிரம் வீடுகள் கடைகள் தொழிற்சாலைகள் தீக்கிரையாக்கப்பட்டன என்றும் அரசாங்க அறிக்கை கூறியது. ஆனால் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் தொகை இதைவிட அதிகம். சுமார் ஓர் இலட்சம் பேர் அகதிகளானார்களென்றும் இவர்களுக் காக நாடெங்கிலும் 25 அகதி முகாம்கள் திறக்கப்பட்டன என்றும் அரசாங்கம் கூறியது. ஆனால் இதனைவிடப் பல மடங்கு சேதங்கள் ஏற்பட்டனவெ ன்று தமிழர் தரப்புகள் தெரிவித்தன.

இந்த இனசங்காரத்தை உசுப்பிவிட்டது ஜே.ஆரின் அரசாங்கம் என்பதை மறுக்க முடியாது. யாழ்ப்பாணத்திலிருந்து சிங்கள மக்கள் விரட்டப்பட்டார்கள் என்ற உண்மையையும் நாம் ஏற்றுக் கொண்டு தானாக வேண்டும். ஆயுதம் ஏந்திய தமிழீழக் குழுக்களே இதன் பின்புலத்திலிருந்து செயற்பட்டன.

## இலங்கை பொலிஸ் திணைக்களம் (4ம் பக்கத் தொடர்ச்சி)

16. நீங்கள் தற்போது பொலிஸ் உப சேவையில் சேவை செய்கிறீர்களா? அவ்வாறாயின் நியமனத் திகதி, பதவிநிலை மற்றும் இலக்கம் போன்ற விபரங்களைக் குறிப்பிடுக. நியமனக் கடிதத்தின் பிரதியை இணைக்குக :----

17. (அ) நீங்கள் படைதாங்கு சேவையில் சேவையாற்றுகிறீரா? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு சேவையில் சேவையாற்றியுள்ளீரா? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

18. (அ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் சேவையாற்றுகிறீரா? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படை தாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் சேவையாற்றியுள்ளீரா? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும்.

19. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் விபரம் தருக :—

20. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தப்பட்டு சந்தே கத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் விபரம் தருக :—-

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவை யென்றும் இத்தால் நான் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பின் எந்த சந்தர்ப்பத் திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

..................

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----

21. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி .............................. அவர்கள் இந்த திணைக்களத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையில் இருந்து விடுவிக்க முடியும் என தெரிவிக்கிறேன்.

..................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி முத்திரை இடப்பட வேண்டும்.

பதவி :-----

திகதி :-----

## தமிழன் கணக்கு போட்டு வாழ்பவனா?

**"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"** என்றார் தமிழ் மூதாட்டி ஔவையார். தமிழ் மறை தந்த வள்ளுவரோ எழுத்தை விட எண்ணையே பெரிதாக மதித்து "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்றார். இங்கு எழுத்துக்களைச் சொல்லும் போது ஏனோதானோ என்ற ரீதியில் ஏனை எழுத்தென்ப எனக் கூறி எண்ணின் முக்கியத்துவத்தை தெளிவாக்கினார்.

தமிழிலுள்ள பல நூல்களுக்கு எண்களின் பெயர்களே உண்டு. பதினெண் கீழ்க்கணக்கிலே நாலடி- நான்மணி - நானாற்பது- ஐந்திணை முப்பால் என்பனவும், கம்பர் பாடிய ஓர் எழுபது ஒட்டக்கூத்தரின் நட்பு எழுபது மற்றும் புறநானூறு- அகநானூறு - இன்னா நாற்பது- இனியவை நாற்பது - முத்தொள்ளாயிரம் - பயிற்றுப் பத்து இப்படிப்பல நூல்களும் எண்களின் பெயர்களுடன் இருக்கின்றன. எண்களின் பெயர் சம்பந்தமாக எழுதுவதாயின் அது மிகப் பெரிதாக விரிவடைந்து விடும் என்பதால் இலக்கியத்தில் பெருக்கல் வாய்ப்பாடும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கச்சியப்பசிவாச்சாரியார் கந்தபுராணத்தில் **"மூவிரு முகங்கள் போற்றி" "ஆறிரு தடந்தோள் வாழ்க"** என ஆறுமுகத்தையும் பன்னிரு தோள்களையும் பாடுகின்றார். கம்பரும் கணித வாய்ப்பாட்டைக் கைவிடவில்லை. இராமரைப் பதினான்கு வருடம் காட்டுக்குப் போகும்படி கூறும் கைகேயி **"ஏழிரண்டாண்டில் வாவென்று இயம்பினன் அரசன் என்றாள்"** என்கிறார்.

அதுமட்டுமன்றி கும்பகர்ணன் சாப்பிடும் உணவு பற்றிக் கூறும் போது

**"ஆறு நூறு சகடத்தடிகிலும் நூறு நூறு குடக்கள்ளும் நுங்கினான்"**

என்று அறு நூறு வண்டில் சோறும் பத்தாயிரம் குடங்கள்ளும் உண்டதைக் குறிப்பிடுகிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

வசைபாடும் காளமேகம் முருகனுக்கும் விநாயகருக்கும் சிலேடையாகப் பாடும்போது **"சென்னி முக மானுளதாலட சேர்கரமுந் நாலுகையால்"** என்கிறார். முருகனுக்கு முந்நாலு பன்னிரண்டு கைகள் விநாயகருக்கோ முன்னால் தூங்கும் கை என்பது இதன் பொருள்.

வெண்பாவிற் புகழேந்தி எனப் புகழ்பாடும் புகழேந்தி யாரும் தமயந்தியின் இரண்டாவது சுயம்வரத்துக்குச் செல்லும் நளன் தேர் செலுத்திய வேகத்தைச் சொல்லும் போது

**" மேலாடை வீழ்ந்தது எடு என்றான் அவ்வளவின் நாலாறு காதம் நடந்ததே....."**

என்றார்.

இருபத்து நான்கு காதம் என்றால் இருநூற்றி நாற்பது மைல்கள் - அரசன் தனது அங்க வஸ்திரம் விழுந்து விட்டது எடு என்று கூறற்கிடையில் இருநூற்று நாற்பது மைல்கள் கடந்து விட்டதாம் தேர்.

இளங்கோவடிகளும் தமது சிலப்பதிகாரத்திலே நடந்து களைத்த கண்ணகி கோவலனிடம் "மதுரை மூதூர் இன்னும் எவ்வளவு தூரம்?" என்று கேட்க "ஆறு ஐந்து காதம்" என்று கோவலன் கூறுவதாகக் கூறுகின்றார். பட்டினத்தடிகளும் "ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்று" என்றார். இப்படிப் பார்த்தால் தமிழன் கணக்குப் போட்டு வாழ்பவனா?


நயினை கி.கிருபானந்தா
செயலாளர்
யாழ்.இலக்கிய வட்டம்.

# அபிவிருத்தியின் திறவுகோலாக

கொடிய யுத்தம் முடிவடைந்து தற்போது அமைதிச் சூழ்நிலை ஏற்பட்டுள்ள போதிலும், குடாநாட்டின் மூலைமுடுக்குகளில் அபாயகரமான வெடிபொருட்கள் இன்னமும் மறைந்திருப்பதால், அப்பாவிச் சிறுவர்கள் அவற்றினை எடுத்து விளையாட முற்படும்போது உயிர்களையே பறி கொடுப்பது அனைவருக்கும் அதிர்ச்சியளிப்பதாக உள்ளது.

கடந்த ஜூன் 4 ஆம் திகதி நயினாதீவு 8 ஆம் வட்டாரத்தில் வசிக்கும் தர்மகுலசிங்கம் 'ருபன் என்னும் 14 வயது பாடசாலை மாணவனின் மரணத்திற்கு கடற்கரையில் காணப்பட்ட அநாமதேய வெடிபொருளே காரணமாக அமைந்துள்ளது. யுத்தம் நிறைவடைந்து 3 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் இன்னமும் வெடிபொருட்கள் குடாநாட்டின் பல்வேறு

STATUS OF DEMINING AS OF 30 APRIL 2012




பகுதிகளில் பரவிக் கிடப்பதும், கடற்கரைகளில் அவ்வப்போது ஒதுங்குவதும், அவற்றிற்கு மக்கள் பலியாவதும் தொடர்கதையாக நீண்டு செல்கிறது.

இத்தகைய சம்பவங்களை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து, எதிர்காலத்தில் இவற்றினை தடுத்து நிறுத்துவது குறித்து ஆராய்ந்து செயற்படவேண்டியதன் அவசியத்தை தன்னார்வ நிறுவனங்கள் உணர்த்த வேண்டும். மாணவர்கள், சிறுவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் வெடிபொருட்கள் பற்றிய விழிப்புணர்வை சமூகத்தில் அக்கறை கொண்டவர்கள் ஏற்படுத்த முன்வருவதுடன் இதில் பாதுகாப்புத் தரப்பினரும் கூடிய கவனம் செலுத்துவது அவசியமாகும்.

சிறுவர் துஸ்பிரயோகம், பாலியல் வன்முறை போன்ற சமூகச் சீர்கேடுகளை வெளிச்சம் போட்டுக் காட்டும் ஊடகங்கள், சமூகத்தில் நிலவும் இத்தகைய இளஞ்சிறார்களின் மரணங்களுக்கு காரணமாக அமையும் வெடிபொருட்கள் குறித்து விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளுக்கு முக்கியத்தும் கொடுக்க முன்வர வேண்டும் என்பது சமூக ஆர்வலர்களின் கருத்தாக இருக்கின்றது.

யாழ். நயினாதீவு பூசாரி அம்மன் கோவிலுக்கு அருகில் கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் குண்டு வெடித்ததன் காரணமாகவே உயிரிழந்துள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

புலிகள் பயன்படுத்திய அருள் குண்டு வெடித்தே நயினாதீவு சிறுவன் உயிரிழந்துள்ளார். இதனை இராணுவத்தரப்பை கோடிட்டு காட்டி தென்பகுதி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த வெடிப்பு தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணையில், தமிழீழ விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்ட அருள் வர்க்க குண்டே வெடித்துள்ளதாக தெரியவந்துள்ளதென இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருந்தார். இவ்வெடி விபத்தில் 15 வயதுடைய அபிமனசிங்கம் 'ருபன் என்ற நயினாதீவு மூன்றாம் பிரிவு பகுதியைச் சேர்ந்த சிறுவனே உயிரிழந்தவராவார்.

இதேவேளை கடந்த 23 ஆம் திகதி காலை 7 மணியளவில் யாழ். முகமாலை முன்னரங்கப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டு இருந்த கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் கண்ணி வெடியில் சிக்கி படுகாயடைந்துள்ளனர். அத்தோடு கடந்த ஜூன் 18 ஆம் திகதி யாழ். வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் மிதி-வெடி வெடித்ததில் இளைஞர் ஒருவர் தனது காலை இழந்துள்ளார்.

கடற்றொழிலுக்காகச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த வெடி விபத்தில் சிக்கியதில் யாழ். வடமராட்சி கிழக்கு நாகர்கோவிலைச் சேர்ந்த செல்வரத்தினம் செல்வதாஸ் (வயது 27) என்ற இளைஞனே காயமடைந்தவராவார். எது எவ்வாறு இருந்தாலும் வடக்கில் வெடி பொருட்களின் வெடிப்புக் காரணமாக அப்பாவிகளின் உயிர் பறிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது.

வடக்கு, கிழக்கில் சந்தேகத்திற்கிடமான, மர்மப்பொருட்கள் குறித்து பெற்றோரும், பெரியோரும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும், அவர்கள் தமது குழந்தைகளை விழிப்புடன் கண்காணிக்க வேண்டும் எனவும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். அண்மை காலங்களில் வடக்கு, கிழக்கில் ஆறு, குளம், களப்பு, கடற்கரை, காட்டுப் பகுதிகளில் மர்மப் பொருட்கள் வெடித்ததினால் பலர் உயிரிழந்ததுடன் சிலர் காயமடைந்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

அநாதரவாகக் கிடக்கும் பொருட்களை கையிலெடுத்து சோதனைக்கு உட்படுத்துகின்றமையே இவ்வாறான விபத்துக்களுக்கு காரணமாக அமைந்து


**யுத்த காலத்தில் எதிரிகளை இலக்கு வைத்து தரப்பினராலும் புதைக்கப்பட்ட நிலக் கண்ணி இன்று அப்பாவி பொதுமக்களும், கால்நடை அநியாயமான முறையில் பலியெடுக்கப் வருகின்றதோடு, கண்ணி வெடிகள் புதைக் நிலங்கள் மக்கள் பாவனைக்கோ கால்நடை மேய்ச்சல்களுக்கோ உதவாத நிலையில் வெ நிலமாக மாறி வருகின்றமை எமது கண்**

விடுகின்றன. எனவே அவ்வாறான மர்மப் பொருட்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும்.

அத்தோடு அவ்வாறான பொருட்களை கண்டால் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் தலைமையகத்துக்கோ அல்லது படைத் தளங்களுக்கோ தெரியப்படுத்த வேண்டும்.



# கிழக்கின் அபிவிருத்தியில் பாசிக்குடா!



மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்குடாத் தொகுதியில் அமைந்துள்ள பாசிக்குடா கடற்கரை கிழக்கு மண்ணின் உல்லாச புரியாக இன்று திகழ்கின்றது.

புலிகளின் கடந்த கால வன்செயல்கள் பாசிக்குடாவை பாழடைந்த பிரதேசமாக மாற்றியிருந்தது. எனினும் புலிகளைத் தோற்கடித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இன்றைய அரசாங்கம் தற்போதைய சமாதான சூழலில் கிழக்கின் இயற்கை அழகை மீண்டும் சுதந்திரமாக ரசிக்கும் வாய்ப்பை மக்களுக்கு வழங்கியுள்ளது.கரையிலிருந்து நெடுந்தொலைவு வரைக்கும் படிப்படியாக ஆழம் அதிகரித்துச் செல்லும் இயற்கை நீச்சல் தடாகம் இது. உண்மையில் இத்தகையதொரு எழில் மிக்க கடற்கரை இயற்கை வழங்கிய அருட்கொடையாகும்.

தென்னம் கிடுகளால் நேர்த்தியாக வேயப்பட்ட கபாணா" என்றழைக்கப்படும் உல்லாச விடுதிகளும்- அச்சமற்ற கடல் குளிப்புக்கும் படகுச் சவாரிக்கு ஏற்ற கடலும்- வெளிநாட்டு- உள்நாட்டு சமூகங்களின் நல்லுறவும் பாசிக்குடாவை ரசிக்கத் தூண்டும் காரணிகளாகும்.

அழகான கடல்பரப்பு- விநோதமாக முருகைக்கற்பாறைகள்- அரிய கடற் தாவரங்கள் மற்றும் கடல் வாழ் உயிரினங்கள் ஆகியவற்றின் இயற்கை வனப்புக்கள் உள்ளங்களை கொள்ளை கொள்கின்றன.

இந்தப் பாசிக்குடாப் பிரதேசத்தைச் சுற்றிப்பார்க்கும் ஒரு வாய்ப்பை அரசாங்க தகவல் திணைக்களம் கொழும்பிலிருந்து சென்ற ஊடகவியலளார்களுக்கு கடந்த சனிக்கிழமை

திசைகளில் இருந்தும் சகல இன உல்லாசப் பயணிகளும் தினமும் பொழுதைக் கழிப்பதாக அங்குள்ள தெரிவித்தார்.விடுமுறை மற்றும் வா நாளொன்றுக்கு சுமார் ஐயாயிரம் வருவதாக ஆங்காடி வியாபாரியொ

இவ்வாறாக உல்லாசப் பிரயாணி பொருளாதார ரீதியாகவும் இப்பிரதே வாய்ப்புக்களைத்தோற்றுவித்துள்ளது கொண்ட விடுதிகள்- உணவகங்கள் முதலீடுகள் அதிகரித்துள்ளது. மே உல்லாசப் பிரயாணிகளை கவரும் அதிகரித்துள்ளன. இதன் காரணமா பொருளாதாரம் முன்னர் எப்போதும் பெற்றுள்ளது.

யூத்தம் காரணமாக தமது துணை இங்கு சிறு வியாபார நடவடிக்கை பெற்றுக்கொள்கின்றனர்.இங்குவரும் நன்மை கருதி 3 மில்லியன் டொ "மாலு மாலு" ஹோட்டலைப் பார் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்ப

பயங்கரவாதம் முறியடிக்கப்பட் அழகிய கடற்கரைப் பிரதேசத்தில்

# வடக்கில் கண்ணிவெடியகற்றல்

இவ்வாறான மர்மப் பொருட்கள் வெடித்ததில் அதிகமாக சிறுவர்களே பலியாகியுள்ளனர். ஆகையால் பெற்றோர்களும் ஆசிரியர்களும் இந்த விடயம் தொடர்பாக சிறுவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

அதாவது சிறுவர்கள் அவ்வாறான மர்மப் பொருட்களைக் கண்டால் உடனடியாக தமது பெற்றோருக்கு தெரியப்படுத்துமாறு அவர்களை வலியுறுத்த வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார். முன்பள்ளிகளில் கல்வி பயின்று வரும் பச்சிளம் சிறார்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் இத்தகைய வெடிபொருட்கள் பற்றிய விழிப்பூட்டல்களை தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்பதுடன், இதில் ச●த்திலுள்ள பொது அமைப்புகள், கல்வியியலாளர்கள், பெற்றோர்கள் என அனைவரும் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

ந்து இரண்டு
வெடிகளால்
டைகளும்
ப்பட்டு
க்கப்பட்ட
டைகளின்
வறும் தரிசு
கூடே.

மனித உயிர்களை இலக்கு வைத்து கடந்த காலங்களில் போர் நடவடிக்கையில் ஈடுபட்ட இருதரப்பினராலும் புதைக்கப்பட்ட வெடி பொருட்கள் இதுவரையில் முழுமையாக அகற்றப்படவில்லை. இதனால் அப்பகுதியில் மீளக்குடியேற முடியாத அவல நிலையில் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பது உலகறிந்த உண்மையாகும்.

வடக்கில் மிதிவெடியகற்றும் அமைப்புகளால் இதுவரை 1936 சதுர கிலோ மீற்றர் பகுதியில் 7,91,620 மிதிவெடிகள் வெடி பொருட்கள் அகற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதுடன், முல்லைத்தீவில் 124 சதுர கிலோ மீற்றர் பகுதி மட்டுமே மிதி வெடியகற்றும் பணிகளாக எஞ்சியுள்ளதாக யாழ்.மாவட்ட செயலக கண்ணிவெடி அகற்றும் பிரிவு தனது அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

எஞ்சியுள்ள மிதிவெடிகளை அகற்றும் பணிக்காக 1500 இராணுவத்தினரும் 29 மிதிவெடியகற்றும் இ●திரங்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் இந்த மிதிவெடியகற்றும் பணிகள் அண்மைக் காலங்களில் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, பொலனறுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் இடம்பெற்று வருகின்றன.

வட மாகாணத்தில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருந்த 1418 சதுர கிலோ மீற்றர் பரப்பில் 1314 சதுரகிலோ மீற்றர் பகுதியில் மிதிவெடிகள் அகற்றும் பணி பூரணமாகியுள்ளது. 640 சதுர கிலோ மீற்றர் பரப்பில் புதைக்கப்பட்டிருந்த மிதி வெடிகளில் 622 சதுர கிலோமீற்றர் பரப்பில் மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



இதுவரை அதிகளவிலான மிதிவெடிகள் யாழ்ப்பாணத்திலேயே (219,940) அகற்றப்பட்டுள்ளது. அடுத்தபடியாக கிளிநொச்சி (214,240), வவுனியா (118,054), முல்லைத்தீவு (104,351) மற்றும் மன்னார் (103,265) ஆகிய இடங்களில் மிதிவெடியகற்றப்பட்டுள்ளது. இன்னமும் அகற்றப்பட்டு வருகின்றன.

சில சர்வதேச அமைப்புகள் உள்நாட்டு அமைப்புகளுடன் இணைந்து வடக்கு மற்றும கிழக்கு பகுதிகளில் மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபடுகின்றன. மிதிவெடியகற்றும் பணியானது யுத்தம் முடிவடைந்ததையடுத்து ஆரம்பமானது. மூன்று மாகாணங்களில் 5000 சதுர கி.மீ. பரப்பில் மிதிவெடிகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்ட போதும் தொழில்நுட்ப ஆய்வு 2061 சதுர கி.மீ. பரப்பிலேயே மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்ததாக யாழ். மாவட்ட செயலக கண்ணி வெடியகற்றும் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது. யுத்தத்தின் வடுக்களைத் தாக்கிய மக்களின் வாழ்வியலில் வெடி பொருட்களின் தாக்கத்தினால் அதில் இருந்து மீளமுடியாது நித்தமும் தவிக்கின்றனர். எப்போது கிடைக்கும் இதுக்கொரு முடிவு?

யுத்த காலத்தில் எதிரிகளை இலக்கு வைத்து இரண்டு தரப்பினராலும் புதைக்கப்பட்ட நிலக் கண்ணி வெடிகளால் இன்று அப்பாவி பொதுமக்களும், கால்நடைகளும் அநியாயமான முறையில் பலியெடுக்கப்பட்டு வருகின்றதோடு, கண்ணி வெடிகள் புதைக்கப்பட்ட நிலங்கள் மக்கள் பாவனைக்கோ கால்நடைகளின் மேய்ச்சல்களுக்கோ உதவாத நிலையில் வெறும் தரிசு நிலமாக மாறி வருகின்றமை எமது கண்கூடே. இன்று வடபகுதியில் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்ணிவெடியகற்றல் நடவடிக்கைகளில் இராணுவத்தினரும், பெண் கண்ணிவெடி அகற்றும் தொழிலாளர்களும் இணைந்து பணியாற்றி வருகின்றமை சிறப்பம்சமே.

யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பளை பிரதேசத்தில் யுத்த காலத்தில் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகள் மீள்குடியேற்றத்திற்காக அகற்றப்பட்டு வருகின்றன. கடந்த 20 வருட யுத்தத்தின் பின்னர் இப்போது தெல்லிப்பளை பிரேதேசத்திலே மக்களை மீள்குடியேற்றுவதற்காக விடப்பபட்டுள்ளனர். இந்தப்பிரதேசம் கடந்த 20 வருடங்களாக ராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டு அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. அந்த வேளை ராணுவத்தினர் தமது பாதுகாப்பிற்காக அவர்களால் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகள் இப்போது டென்மார்க் கண்ணி வெடி அகற்றும் பிரிவினரால் அரச அனுமதியுடன் மக்களின் மீள் குடியேற்றத்திற்காக அகற்றப்பட்டு வருகிறது. இதிலே அகற்றப்பட்ட கண்ணி வெடிகள் எவ். எம். ஜே, பரட்கோயில், ஸ்ருன்கிராண்டர் ஆகிய கண்ணி வெடிகள் மீட்கப்பட்டன. ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தை அண்டி உட்பட்ட பிரதேசத்திற்கு கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் 85 ஊழியர்கள் தமது பணியின்ன மேற்கொணடுள்ளனர்.

இங்கு பிரதான தொழிலாக மக்கள் விவசாயத்தினை செய்துள்ளார்கள். ஆனால் யுத்த காலத்திற்கு பின்னர் இந்தப்பிதேசம் மிகவும் பற்றைகளும் காடுகளுமாக காணப்படுகிறது. மக்களின் வீடுகளும் இடிந்த நிலையில் காணப்படுகிறது. இப்பிரதேசம் இப்போது மக்களின் மீள்குடியேற்றத்திறிகாக அரசினால் தீர்மானிக்கப்பட்டு கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன. கண்ணி வெடிகள் இல்லை என்று இனங்காணப்பட்ட பகுதிகளில் மக்கள் சென்று தமது காணிகளையும் வீடுகளையும் பார்வையிடுவதோடு சிலர் தமது காணிகளில் வளர்ந்துள்ள பற்றைகளை அகற்றி மீண்டும் குடியேறுவதோடு விவசாயத்தினையும் செய்வதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளிகின்றனர், இன்னும் சிலர் உடைந்த தமது வீடுகளை மீண்டும் திருத்தி அமைத்து வருகின்றனர் ●

நன்றி: இணையம்

---

வழங்கியது.கடந்த காலங்களில்
தோன்றிய இன முரண்பாடுகளை
மறந்து சிங்கள-தமிழ்- முஸ்லிம்
மக்கள் பாசிக்குடாவில் கூட்டாக
உல்லாசம் அனுபவிப்பதை நாம்
அவதானித்தோம்.இலங்கையின் நாலா
ா சகோதரர்களும்- வெளிநாட்டு
இங்கு வருகை தந்து உல்லாசமாக
ள ஹோட்டல் சிப்பந்தி ஒருவர்
வார இறுதி நாட்களில்
பேர் இக்கடற்கரை எழிலைக் காண
பாருவர் தெரிவிததார்.
ரிகளின் வருகை அதிகரித்துள்ளமை
தேசங்கள் மேன்மையடைய
து.வானுயர்ந்த அதி நவீன வசதி
கள் அமைக்கப்படுகின்றன.
மலும் படகு சவாரி போன்ற
ம் தொழிற்துறைகளும்
ாக இப்பிரதேச மக்களின்
ம் இல்லாத அளவில் எழுச்சி

ணையை இழந்த பல பெண்கள்
ககளில் ஈடுபட்டு நல்ல வருமானம்
் உல்லாசப் பிரயாணிகளின்
லர் செலவில் அமைக்கப்பட்டுள்ள
வையிடும் சந்தர்ப்பமும்
பட்டது.
ட பின்னர் கிழக்கு மாகாணத்தின்
் முதலில் அமைக்கப்பட்ட நவீன

உல்லாசப் பயண ஹோட்டல் இதுவாகும்.

பாசிக்குடாவில் வாழும் மக்களின் பிரதான பொருளாதார வளம் கடற்றொழிலாகும். இதன் குறியீடாகவே இந்த ஹோட்டலுக்கு - மாலு மாலு - எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதனை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ திறந்துவைத்தார்.

கடல் நீரில் சுழியோடுதல் மற்றும் கடல் நீரில் சறுக்கி விளையாடுதல் போன்ற வினோத சாகசங்களுக்காக இங்கு விசேட வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

ஹோட்டல் அமைப்பைப் பார்த்து வியந்தவாறே நாம் ஒவ்வொரு பகுதியாகச் சென்று பார்வையிட்டோம். சுற்றிவர அமைக்கப்பட்ட ஹோட்டல்களுக்கு மத்தியில் நீல நிறத்தில் காட்சியளித்த நீச்சல் தடாகத்தில் உள்நாட்டு உல்லாசப் பிரயாணிகள் சிறு பிள்ளைகள்



சகிதம் ஆனந்தமாக நீராடிக்கொண்டிருந்தனர். மற்றும் சிலர் ஆழமற்ற கடலில் இறங்கிக் குளித்துக்கொண்டிருந்தனர்.

கடற்கரை வெண் மனல் பரப்பில் நிழல் குடைகளின் கீழ் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் சிலர் ஆண்களும் பெண்களுமாக வெயில் குளித்துக்கொண்டிருந்தனர். அவர்களுடன் உரையாடினோம். அவர்களில் ஜெர்மன் நாட்டுப் பிரஜை ஒருவர் " உண்மையிலேயே இலங்கை நாடு இந்தப் பூமியில் உள்ள ஒரு சொர்க்கபுரிதான்" எனக் கருத்துத் தெரிவித்தார்.

இந்த ஹோட்டலில் ஏதாவது குறைகளைக் காணுகிறீர்களா? என்று நாம் கேட்டபோது "ஆம் ஒரு குறை உண்டு. அதாவது சகல வசதிகள் கொண்ட அறைகள் இருந்தபோதும் அந்த அறைக்குள் இருந்துகொண்டு வெளியே உள்ள காட்சிகளைப்பார்க்க யன்னல்கள் இல்லை. என்றார். இதனை நாம் அந்த ஹோட்டல் நிருவாகிகளிடம் உடனே தெரிவித்தோம்.

அதன் பின்னர் அதன் அருகில் அமைக்கப்பட்டுள்ள மற்றும் ஒரு ஹோட்டலைப் பார்வையிட்டோம். எமக்கு குளிர் பானம் தந்து வரவேற்றனர். வெயில் உஷ்ணம் தணிக்க ஓடிக்குளோன் டவல் தந்தனர். அதன் பின்னர் கருத்துத் தெரிவித்த அதன் முகாமையாளர்- தமது ஹோட்டல் அறைகள் நிறைந்துள்ளதாகவும் நல்ல வருமானம் கிடைப்பதாகவும் கூறினார்.பயங்கரவாதம் நிலவிய இப்பிரதேசத்தில் இப்படியான ஒரு பொருளாதார வள மையம் அமைத்துத் தந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர பசில் ராஜபக்ஷவுக்கும் நன்றி தெரிவிப்பதாகக் கூறினார்.

அதன்பின்னர் பொது மக்களுக்கு என தனியாக ஒதுக்கப்பட்டுள்ள ஒரு கடற்கரைப் பிரதேசத்தைப் பார்வையிட்டோம். ஆயிரக் கணக்கான பல்லின மக்கள் அங்கு மர நிழல்களிலும் கடலிலும் உல்லாசம் அனுபவித்துக்கொண்டிருந்தனர். சிலர் கடலில் படகுச் சவாரியல் ஈடுபட்டிருந்தனார். இன்னும் சிறிது நேரம் அங்கு தங்கி இயற்கையை அனுபவிக்க மனம் விரும்பியபோதும் நேரக்கட்டுக்ப்பாடு காரணமாக அங்கிருந்து விருப்பமின்றி விடைபெற்றெளம்.

கிழக்கில் உல்லாசப் பிரயாணத்துறை மறுமலர்சியால் அப்பிரதேச மக்களின் வாழ்வில் புது வசந்தம் தோன்றியூள்ளமையை எவரும் மறுக்க முடியாது ●

எம்.ஜே.எம்.தாஜுதீன்

# அமெரிக்கப் பிரேரணைக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தமை தவறு

\- வீ. ஆனந்தசங்கரி

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணைக்கு இந்தியா ஆதரவளித்தமை தவறு" என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். அமெரிக்கப் பிரேரணைக்கு இந்தியா ஆதரவளித்தமை இலங்கை - இந்தியா உறவுகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய தென்றும் ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

இந்திய அரசியல் கட்சிகளுக்கு அனுப்பிவைத்துள்ள பகிரங்கக் கடிதமொன்றிலேயே ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிராகத் தமிழக அரசியல் வாதிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும். அத்துடன் தமிழ் மக்களின் இலட்சியத்துக்குக் குந்தகமாக அமையும். ஜெனீவாவில் பிரேரணை முன்வைக்கப்பட்டபோது இந்தியா நடுநிலைமை வகித்து, அமெரிக்கா தன்பாட்டில் அப்பிரேரணையை முன்வைத்துச் செயற்பட அனுமதித்திருந்தால் இலங்கைத் தமிழ் மக்களின் நோக்கங்களுக்கு அது வாய்ப்பாக அமைந்திருக்கும். இந்தியா பிரேரணைக்கு வாக்களிக்காமல் விட்டிருந்தாலும் கூட அமெரிக்காவின் பிரேரணை நிறைவேற்றப்பட்டிருக்கும். இவ்வாறு கூறினார் ஆனந்தசங்கரி.



## கருத்தரங்கு

மாவிட்டபுரம்

இவ்வாண்டு நடைபெறவுள்ள கா.பொ.த உயர்தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாட நெறிக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை

வழிகாட்டல் கருத்தரங்கு யாழ்ப்பாணம் கல்விவலய த்தினரால் யாழ்ப்பாணம்மத்தியகல்லூரியில் யாழ்வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க. ஜெயபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இக்கருத்தரங்கு நிகழ்விற்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில் வேந்தன் விசேட அதிதியாகக் கலந்து கொண்டு கருத்தரங்கினை ஆரம்பித்து வைத்தார்.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் நாடகமும் அரங்கியலும் முன்னனி ஆசிரியர்களால் வழிப்படுத்தப்பட்ட இக்கருத்தரங்கில் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

மூன்று தினங்கள் நடைபெற்ற கருத்தரங்கு தொடரின் ஒழுங்குபடுத்தலினை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் எஸ்.ரி. குமரன் மேற்கொண்டுள்ளார்.

இக்கருத் தரங்கு தொடர்பாக மாணவர்கள் கருத்து தெரிவிக்கும் போது மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. தெரியாத விடயங்கள் பற்றி அறியவும் தெரிந்த விடயங்கள் பற்றி தெளிவும் ஏற்பட வழிவகுக்கும் வகையில் பயனுள்ளதாக அமைந்திருந்ததாக குறிப்பிட்டனர்.

## சிறுவர் பாதுகாப்புக்காக விழிப்புணர்வுக் கருத்தரங்கு

மன்னார்

சிறுவர் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பான பரந்தளவிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நெய்வர் அமைப்பும் சர்வமதப் பேரவையும் செயலமர்வொன்றினை மன்னாரில் நடத்தியது.

அருட்திரு தமிழ்நேசன் அடிகளின் ஏற்பாட்டில் சிறுவர் நலன் பேணும் அமைப்புக்களின் பிரதிநிதிகள், கல்வி, சுகாதார மற்றும் சட்ட அதிகாரிகள் உட்பட அதிகளவானோர் இச் செயலமர்வில் கலந்து கொண்டனர்.

## பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 90 பேர் யாழில் கைது

வலிகாமம்

யாழ் மாவட்டத்தில் என்றும் இல்லாதவாறு நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட அதிக எண்ணிக்கையான குறற்வாளிகள் இந்த வாரத்தில் யாழ் மாவட்ட பொலிஸ் நிலையங்களினால் பரவலாக கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கடந்த காலங்களில் யாழ் மாவட்டத்தில் பொலிசார் ரோநது நடவடிக்கைகள் சுற்றி வளைப்புக்களின்போது கறிப்பிட்டளவு பிடியானை பிறப்பிக்கப்பட்டவாகளை கைது செய்துள்ள போதிலும் ,ந்த வாரம் 90 பிடியானையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் உள்ள பொலிஸ் நிலையங்களினால் 74 பிடியானை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளிகளும் காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில உள்ள பொலிஸ் நிலையங்களினால் 16 பிடியானை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டதுடன் நீதிமன்றங்களின் முன்னர் ஆஜர் செய்யப்பட்டதைத் தொடர்ந்து விளக்கமுறியலில் வைக்கப்பட்டள்ளதாகவும் யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ளரிக்பெரேரா தெரிவித்துள்ளார்.

## கலை இலக்கியக்கழக வெள்ளிவிழா

அளவெட்டி

தெல்லிப்பழை கலைஇலக்கியக்கழகத்தில் வெள்ளி விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை இராமநாதன் கல்லூரி அருணாசல மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழகமுன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன், ஓய்வுபெற்ற மகாஜனாக்கல்லாரி அதிபர் திருமதி சி.அனந்தசயனன் மற்றும் விருந்தினர்களாக வலிகாமம்வலய மாணவர் அபிவிருத்திப்பிரதிக்கல்விப்பணிப்பாளர் ச.கைலாசநாதன் , வலி. வடக்குபிரதேசசபைத்தவிசாளர்சோ.சுகிர்தன், இராமநாதன்கல்லூரியின் பிரதிஅதிபர் திருமதி ந. சிவராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்விற்கு ஆசியுரையினை கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்கினார்.

இந்நிகழ்வில் நான்கு நூல்கள் வெளியிட்டுவைக்கப்பட்டன நூல்களினை பேராசிரியர் நா.சண்முகலிங்கம் வெளியிட்டுவைக்க பொறியியலாளர் சி.தயாபரன் பெற்றுக் கொண்டார்.

நூல் அறிமுகவுரையினை கலை இலக்கியகழகத்தின் தலைவர் சைவப்புலவர் சு.செல்லத்துரை, மகாஜனாக்கல்லாரி ஆசிரியை திருமதி பகீரதி கணேசதுரை ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் சிறுகதைப் போட்டியில் திறந்தபிரிவு, பாடசாலைமட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் மூத்த கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

## ஆணொருவரின் சடலம் தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஒப்படைப்பு

மனைவியுடன் சண்டையிட்டு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாகக் கூறி தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் உறிவினர்களினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் கண்ணகி நலன்புரி நிலையத்தில் வசிப்பவரும் காங்கேசன்துறை தையிட்டியைச் சொந்த இடமாகக் கொண்டவருமான கிட்ணன் ஜீவரத்தினம் என்பவரின் சடலமே தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக வைத்தியசாலையில் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒப்படைக்கப்பட்டுள்ளது.பிரேத பரிசோதனை மேற்க் கொள்வதற்ககாக சடலம் யாழ்ப் பாணம் போதனா வைத்தியசா லைக்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

சுன்னாகம் பொலிசார் இது சம்பந்தமான விசாரனை களை மேற்க்கொண்டுள்ளார்கள்.

## நாளை நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் ஆரம்பம்

வரலாற்றுப் பெருமையும் ஆன் மீகச் சிறப்பும் கொண்ட நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் நாளை (24 ஆம் திகதி) செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து இருபத்தைந்து நாட்கள் மகோற்சவம் நடைபெறும்.

பத்தாம் திருவிழாவாகிய ஒகஸ்ட் 2 ஆம் திகதியன்று மஞ்சத் திருவிழாவும், இருபத்தைந்தாம் நாளாகிய ஆகஸ்ட் 12 ஆம் திகதியன்று கைலாச வாகனத் திருவிழாவும், 22 ஆம் நாளாகிய ஆகஸ்ட் 14 ஆம் திகதியன்று தண்டாயுதபாணி உற்சவமும் (மாம்பழத் திருவிழா), 23 ஆம் நாளாகிய ஆகஸ்ட் 15 ஆம் திகதியன்று சப்பரத் திருவிழாவும், மறுநாள் 16 ஆம் திகதி யன்று காலை இரதோற்சவமும், 17 ஆம் திகதியன்று காலை தீர்த் தோற்சவமும் ஆகஸ்ட் 18 ஆம் திகதியன்று பூங்காவன உற்சவமும் இடம்பெறவிருக்கின்றன.



நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவத்தையொட்டி அங்கப்பிரதிஷ்டை செய்யும் அடியார்களின் வசதிக்காக யாழ்.மாநகர சபை மணல் பரவுவதைப் படத்தில் காணலாம். (ப)

## யாழ். வலயத்தில் நான்கு பாடசாலைக் கட்டிடங்களை அமைச்சர் டக்ளஸ் திறந்து வைத்தார்



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது பணிப்புரைக்கமைய இந்திய அரசின் நிதியுதவியுடன் இப்பாடசாலைக்கான ஏனைய கட்டிடங்களும் அமைத்துத் தரப்படுமென வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரியில் நேற்றுமுன் தினம் (21) இடம்பெற்ற 04 வகுப்பறைகளைக் கொண்ட கட்டிடம் தொகுதியைச் திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இப்பாடசாலையின் பௌதீக வளங்களைக் கருத்திற் கொண்டு இந்திய அரசின் நிதியுதவியுடன் கட்டிடங்களை அமைப்பதற்கு நடவடிக்கையெடுக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கமைய இப்பாடசாலையின் கற்றல் நடவடிக்கைகளுக்கென கட்டிடங்கள் அமைக்கப்படுமெனவும் அமைச்சர் அவர்களின் வழிகாட்டலுடன் முன்னெடுக்கப்படும் பல்வேறு நடவடிக்கைகளில் கல்வி முக்கிய பங்களை வகிபதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நான்கு வகுப்பறைகளைக் கொண்டதான வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் மூன்று மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இப்புதிய கட்டிடத்திற்கான நினைவுக் கல்லை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு திரைநீக்கம் செய்து வைத்ததுடன் கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.


யாழ். அச்சுவேலி மத்திய கல்லூரி நூல் நிலையம், கோப்பாய் நாவலர் மகா வித்தியாலம், கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரி ஆகியவற்றின் வகுப்பறைக் கட்டிடங்களும் நேற்று முன்தினம் அமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டன.

அச்சுவேலி சென் திரேசா மகளிர் கல்லூரி அதிபர் அருட் சகோதரி மரிய றொசாறியோ, அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் வே.அரசகேசரி, கோப்பாய் நாவலர் மகா வித்தியால அதிபர் திருமதி எஸ்.வாகீசன், செங்குந்தா இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.பாலகுமார் ஆகியோர் தலைமையில் இந் நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வுகளில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுதுறைச் செயலாளர் சி.சத்தியசீலன், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பிளாக்கரில் இடுகைகளை பிடிஎப் கோப்பாக சேமிக்க வசதி

வலைப்பதிவர்கள் ஒவ்வொருவருக்கும் தனது படைப்பை அதிக வாசகர்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற ஆர்வம் இருக்கும்.




நமது இடுகைகளை வாசகர்களுக்கு பிடிஎப் கோப்பாக வழங்குவது மூலம் நமது எழுத்துக்களை மேலும் சிலரிடம் கொண்டு சேர்க்க முடியும். அதனை உங்கள் வலைப்பதிவில் நிறுவுவது எப்படி?

வாசிப்பவருக்கு ஓர் இடுகை பிடித்துப் போனால் அந்த இடுகையை தனது கணினியில் வாசிப்பிற்காக சேமித்து கொள்ள விரும்புவார். இணைய உலாவிகளில் இணையப் பக்கத்தை சேமிக்கும் போது இணைய பக்கம் தனியாகவும், அதில் உள்ள படங்கள் தனியாகவும் சேமிக்கப்படும். இடுகைப் பக்கத்தின் பல பகுதிகள் முழுமையாக சேமிக்கப்படாது. இப்படி சேமிக்கப்பட்ட HTML பக்கங்களை அவர் இணைய இணைப்பு இல்லாத ஒரு நண்பருடன் பகிர்ந்து கொள்ளுவது சற்றே சிக்கலான விஷயம்.

இதற்கு பதிலாக நமது இடுகைப் பக்கத்தை ஒரே கோப்பாக PDF வடிவில் கொடுத்தால் அவருக்கு எளிமையாக இருக்கும். அந்த கோப்பை அவர் மற்றவருடன் பகிர்வதன் மூலம் உங்கள் இடுகை பலரை சென்றடையும். இணைய பரிச்சயம் இல்லாதவர் கூட உங்கள் இடுகைக்கான PDF கோப்பை வாசித்து கொள்ள முடியும்.

அதனால் உங்கள் பதிவின் ஒவ்வொரு இடுகையின் கீழும் பிடிஎப்பாக சேமிப்பதற்கான வசதியை அளித்து விட்டால் உங்கள் வாசகர்களுக்கு எளிதாக இருக்கும்.

உங்கள் பிளாக்கர் வலைப்பதிவில் இந்த வசதியை கொண்டு வர உங்கள் வலைப்பதிவின் வார்ப்புரு நிரலில் சில வரிகளை சேர்த்தால் போதுமானது.

உங்கள் பிளாகரின் டாஷ்போர்டு சென்று Layout --> Edit HTML கிளிக் செய்து கொள்ளுங்கள். தோன்றும் பக்கத்தில் 'Expand Widget Templates' என்ற ஆப்சனையும் தேர்வு செய்து கொள்ளுங்கள்.

கிடைக்கும் வார்ப்புரு நிரலில் *<data:post.body/>* என்ற வார்த்தையை தேடுங்கள். அதன் கீழே, கீழ்காணும் வரிகளை காப்பி செய்து பேஸ்ட் செய்யுங்கள்.

```
<a
expr:href='&quot;http://pdfmyurl.com?url=&quot; +
data:post.url'>Download As PDF</a>
```

இப்போது 'Save Template' கிளிக் செய்து உங்கள் வார்ப்புருவை சேமித்து கொள்ளுங்கள். வேலை முடிந்தது.

இனி உங்கள் ஒவ்வொரு இடுகையின் கீழேயும் பிடிஎப்பாக சேமிப்பதற்கான வசதி 'Download As PDF' என்ற சுட்டியாக வழங்கப்பட்டு இருக்கும். அந்த சுட்டியை கிளிக் செய்யும் போது உங்கள் இடுகைப்பக்கம் பிடிஎப் கோப்பாக கணினியில் தரவிறக்கப்படும் ■




# ஒலிம்பிக் போட்டிகளை YouTube ல் இலவசமாக கண்டு ரசிக்கலாம்

2012 ஜூலை 27ந் திகதி முதல் ஆகஸ்ட் 12ந் திகதி வரை லண்டனில் ஒலிம்பிக் திருவிழா கோலகலமாக நடைபெறவிருக்கிறது. ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகளுக்கு உலக அளவில் ஏராளமான ரசிகர்கள் இருக்கின்றனர்.

அந்த வகையில் ரசிகர்களின் ஆர்வத்தைப் புரிந்து கொண்ட IOC YOUTUBE சனலும் தனது ரசிகர்களுக்காக ஒலிம்பிக் போட்டிகளை ஒளிபரப்பு செய்ய முடிவு செய்திருக்கிறது. அதுவும் ஒலிம்பிக் போட்டிகளை HD யில் ஒளிபரப்ப இருக்கிறது. இதன் மூலம் ஆசியா மற்றும் ஆப்பிரிக்க ரசிகர்கள்




இந்த ஒலிம்பிக் போட்டிகளை யூடியூப் ல் இலவசமாக கண்டு ரசிக்கலாம்.

குறிப்பாக இணையத்தள வசதியுள்ள சாதனங்கள், ஸ்மார்ட்போன்கள் மற்றும் YOUTUBE வசதியுள்ள சாதனங்கள் மூலமாக ஒலிம்பிக் போட்டிகளின் நேரடி ஒளிபரப்பை ஒலிம்பிக் ரசிகர்கள் ரசிக்கலாம்.

மேலும் லண்டன் நேரப்படி காலை 9 முதல் இரவு 11 மணி வரை இந்த நேரடி ஒளிபரப்பு இருக்கும். அதுபோல் 24 மணி நேர ஒலிம்பிக் செய்திகளையும் யூடியூப் ஒளிபரப்ப இருக்கிறது. அதன் மூலம் ஒலிம்பிக்கின் அனல் பறக்கும் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்.

முகவரி இதுதான்:

http://www.youtube.com/user/olympic ■




Samsung நிறுவனத்திடம் இருந்து வாடிக்கையாளர்கள் பெரிதும் எதிர்பார்ப்பது Samsung galxy 0 2 ஸ்மார்ட்போன். இந்த ஸ்மார்ட்போனும் இன்னும் வெளியாகவில்லை. இதனால் இந்த இரண்டு ஸ்மார்ட்போனும் வெளியாகும் சமயத்தில் கடும் போட்டி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Iphone-5 ஸ்மார்ட்போன், சாம்சங் கேலக்ஸி எஸ்-3 ஸ்மார்ட்போனையும் விட பெரிய திரையை கொண்டிருக்கும் என்று கருதப்படுகிறது. அது மட்டும் அல்லாது இந்த ஸ்மார்ட்போன் மெலிதான கவர்ச்சிகரமான திரையினை வழங்கும் என்று ஒரு புதிய தகவல் வெளியாகி உள்ளது.

இந்த மெல்லிய திரை வாடிக்கையாளர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சிறப்பானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Apple new ipad வெளியான சமயத்தில், அந்த Tablet அதிகம் சூடாவதாக ஒரு தகவல் வெளியானது. ஆனால் அதன் பிறகு, அந்த நிறுவனம் சரி செய்ததாகவும் மற்றொரு தகவல் வெளியானது. இது போன்ற குறைபாடுகள் ஏதும் iphone-5 ஸ்மார்ட்போனில் ஏற்படாது என்று தோன்றுகிறது.

ஏனெனில் மற்ற நிறுவனங்களுடன் ஒப்பிட்டு பார்க்கையில் samsung நிறுவனம் ஸ்மார்ட்போன் உலகில் அதிகம் பெயர் பெற்று வருகிறது. இதனால் Apple நிறுவனம் வெளியிட இருக்கும் ஐபோன்-5 ஸ்மார்ட்போனில் எந்த விதமான தொழில் நுட்ப கோளாறுகளும் இருக்கக் கூடாது என்பதில் Apple நிறுவனம் மிக கவனமாக இருக்கிறது. மேலும் மற்றபடி இன்னும் அறிமுகமாகாத இந்த ஸ்மார்ட்போன் பற்றி நுணுக்கமான தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை ■

# கோப்பு பகிர்தலை எளிமையாக்கும் டோரன்ட் நுட்பம்

இணையத்தில் உலவுபவர்களுக்கு நல்ல பரிச்சயமான வார்த்தை "டோரன்ட்" பெரும்பாலான வீடியோ பகிர்ந்து கொள்ளும் தளங்களில் கோப்புகளை டோரன்ட் வடிவில் வழங்குவதை நீங்கள் கண்டிருக்கலாம். அந்த் கோப்புகளை தரவிறக்கினால் அவை மிகச்சிறிய அளவிலேயே இருக்கும்.

அதனை திறக்கும் போது வீடியோ ஓட வில்லையே என்று பலர் திகைப்பதுண்டு. டோரன்ட் மூலம் வீடியோக்களை ஃபெரிய கோப்புகளை தரவிறக்குவது எப்படி? என்று இணைய புதியவர்கள் பின்னூட்டத்திலும், ஈமெயில் மூலமாகவும் நீண்ட நாட்களாகவே கேட்டு வருகிறார்கள். அதனைப் பற்றி மற்ற பதிவர்களின் சுட்டிகளுடன் இந்த இடுகையில் பார்ப்போம்.

டோரன்ட் என்பது உங்களிடம் உள்ள கோப்புகளை உலகெங்கும் மற்றவர்களிடையே பகிர்ந்து கொள்ளும் வசதி. சாதாரணமாக தளங்களில் இருந்து கோப்புகளை தரவிறக்கும் போது அந்த கோப்புகளை ஏதாவது ஒரு இணைய வழங்கியில் (Web Server) சேமித்து வைத்து இருப்பார்கள். அங்கிருந்து நீங்கள் அவற்றை பெறுவீர்கள்.

ஆனால் டோரன்ட்களில் உலகெங்கும் நீங்கள் தரவிறக்கும் கோப்புகளை கொண்டுள்ள கணினிகள் இணைய இணைப்பில் இருக்கும் போது இணைக்கப்பட்டிருக்கும். நீங்கள் மற்றவர் கணினியில் இருந்து அந்த கோப்பினை தரவிறக்கி கொண்டிருப்பீர்கள். உங்கள் கணினியில் உள்ள அந்த கோப்பின் பகுதிகள் மற்றவர்கள் தரவிறக்க உங்கள் கணினியில் இருந்து அனுப்பப்பட்டு கொண்டிருக்கும்.

இந்த அருமையான தொழில் நுட்பம் மூலம் அதிக செலவு பிடிக்கும் இணைய வழங்கியின் தேவை இன்றி பயனர்களே தங்கள் கணினிகளை கோப்பினை மற்றவருக்கு பகிரும் வழங்கி ஆகவும்.

தரவிறக்கும் பயனராகவும் பயன்படுத்தி கொள்ள முடிகிறது. யுடோரன்ட் தளத்திற்கு சென்று தரவிறக்கி உங்கள் கணினியில் நிறுவி கொள்ளுங்கள். நிறுவிய



பின் யுடோர்ரன்ட் டாஸ்க் பாரில் வலது மூலையில் வால்யூம் கண்ட்ரோலுக்கு அருகில் இருக்கும். இனி டோரன்ட் தளங்களில் நீங்கள் தரவிறக்கும் டோரன்ட் கோப்புகள் (.torrent) யுடோரன்ட் மூலம் திறக்கப்பட்டு தரவிறக்கம் ஆரம்பமாகும்.

உங்கள் கணினியில் ஏற்கனவே தரவிறங்கி உள்ள கோப்புகள் மற்றவர்களுக்கு அனுப்பப்பட்டு (upload) கொண்டிருக்கும்.

முக்கியமாக உங்கள் தரவிறக்கம் முடிந்த பின்பும் உங்களிடம் தரவிறங்கிய கோப்புகள் மற்றவர்களுக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கும். உங்களிடம் Unlimitted Bandwidth இணைய இணைப்பு இருந்தால் பரவாயில்லை.

Limitted Bandwidth இணைய இணைப்பு உள்ளவர்களாக இருந்தால் உங்களை அறியாமலேயே உங்கள் இன்டர்நெட் பில் ஏறி விடலாம். எனவே தரவிறக்கம் முடிந்தவுடன் உங்கள் யூடோர்றேன்ட் செயலியை நிறுத்தி விடுவது அல்லது மூடி விடுவது நல்லது ■

முன்னேற்பாடு இதில் ஒன்றுமேயில்லை. எனினும்; விலங்குகள் எல்லாம் ஒரேமுகமாக தங்களைத் துன்புறுத்திய மனிதர்கள் மேல் பாய்ந்தன. நாலா பக்கங்களிலிருந்தும் ஜோன்ஸம் அவன் ஆட்களும் மிருகங்களால் தாக்கப்பட்டனர்.

சில மிருகங்கள் முட்டின. சில உதைத்தன. நிலைமை கட்டுக்கடங்கவில்லை. இந்த மாதிரி எப்பொழுதும் விலங்குகள் நடந்து கொண்டதாக அந்த மனிதர்களுக்கு நினைவில்லை. அவர்கள் எதிர்பார்க்காத ஒரு காரியம் அது. தங்கள் இஷ்டப்படி அடித்துத் துன்புறுத்தி என்ன செய்தாலும் சகித்துக் கொண்டிருக்கும் மிருகங்கள் இன்று இப்படித் தங்களை எதிர்த்து நின்று போராடத் தொடங்கவே, ஜோன்ஸுக்கும் அவன் ஆட்களுக்கும் புத்தி தடுமாறுகிற அளவுக்குப் பயம் தோன்றிவிட்டது.

இரண்டொரு விநாடிகளிலே தங்களை எதிர்த்த மிருகங்களை




எதிர்த்து நிற்பதை விட்டு விட்டு ஓடத் தலைப்பட்டார்கள். ஒரு நிமிடத்துக்குப் பிறகு அந்த ஐந்து பேர்களும் பண்ணைக்கு வெளியே போகும் வண்டிப் பாதையில் கிராமத்தை நோக்கிப் போகும் பாதையை நோக்கி ஓடினார்கள்.


மிருகங்கள் வெற்றிகரமாக அவர்களைத் துரத்திக் கொண்டு பின் சென்றன.

படுக்கையறை ஜன்னல் வழியாக என்ன நடந்தது என்று பார்த்த திருவாட்டி ஜோன்ஸ், தன் துணி மணிகளையும் பொருட்களையும் ஒரு பையில் நிரப்பிக் கொண்டு வேறு ஒரு வழியாகப் பண்ணையை விட்டு சந்தடி செய்யாமல் வெளியேறி விட்டாள். மோஸஸ் தன் கூண்டை விட்டு வெளியே வந்து, இறக்கையடித்துக்கொண்டு அவள் தலைக்கு மேலே வட்டமிட்டுப் பறந்து சென்றது, கர்ணகடூரமாகக் கரைந்தது,

இதற்கிடையில், விலங்குகள் எல்லாம் ஜோன்ஸையும் அவன் வேலையாட்களையும் பண்ணைக்கு அப்பால் துரத்திவிட்டு வெளிக் கதவையும் படாரென்று சாத்திப் பூட்டிவிட்டன. "என்ன நடக்கிறது?" என்கிற விஷயம் அவைகளுக்கே நன்றாகத் தெரியும்முன் புரட்சி நடந்தேறிவிட்டது. மிருகங்களுக்கு வெற்றியும் கிட்டிவிட்டது. ஜோன்ஸை வெளியேற்றியாகிவிட்டது. பெரிய பண்ணை மிருகங்களுக்குச் சொந்தமாகிவிட்டது.

இதெல்லாம் நடந்து சில நிமிடங்கள் வரையில் மிருகங்களுக்கே தங்கள் அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை வரவில்லை. இப்படியும் நடந்துவிடலாம் என்று எதிர்பார்க்கவுமில்லை அவை. முதல் காரியமாக பண்ணையின் வேலிகள் ஓரமாக அவை ஓடிச் சுற்றி வந்தன. பண்ணையில் மனிதப் பூண்டே இல்லாமல் போய் விட்டதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே அவை சுற்றிச் சுற்றி ஓடி வந்தன. (நாளை...)

## வரைவோம் வாருங்கள்!



## கப்பல் ஏன் முழ்குவதில்லை!

**ஒரு** ஊரே நகர்ந்து செல்வது போன்ற கப்பல், தண்ணீரில் மிதப்பது எப்படி என்ற வியப்பு நமக்கு ஏற்படுகிறது.

சிறிய கப்பல்கள், பெரிய கப்பல்கள் என்ற வித்தியாசமின்றி எல்லா கப்பல்களுக்கும் எடை உண்டு. ஆகவே ஒரு கப்பல் தண்ணீரில் இருக்கும்போது அதன் உடற்பகுதி ஓரளவு வரை தண்ணீரில் அமிழ்ந்திருக்கும். அதாவது, கப்பலின் எடைக்குச் சமமான தண்ணீர் இடம்பெயரும் வரை அதன் உடற்பகுதி தண்ணீரில் அமிழும்.



10 ஆயிரம் டன் எடையுள்ள ஒரு கப்பலின் உடற்பகுதி, அதே எடையுள்ள தண்ணீரை இடம்பெயரச் செய்யும். எனவே ஒரு கப்பலின் எடையைக் கூறுவதற்குப் பதிலாக, அது இடம்பெயரச் செய்யும் தண்ணீரின் எடையைக் கூறுகிறார்கள். அதாவது ஒரு கப்பலின் ஹூடிஸ்பிளேஸ்மெண்ட்" 10 ஆயிரம் டன் என்று கூறுவார்கள். அமிழ்ந்துள்ள கப்பலின் ஒவ்வொரு பகுதியையும் தண்ணீர் அழுத்துகிறது.




பிரபஞ்சம் உருவான வரலாறை ஆய்வு செய்து வரும் விஞ்ஞானிகள், ஆய்வின் முக்கியமான முன்னேற்றமாக "கடவுளின் அணுத்துகள்" என அழைக்கப்படும் "ஹிக்ஸ் போசன்" என்ற பொருளை கண்டுபிடித்துள்ளனர்.

"பிக்பேங்" என்ற பிரளய வெடிப்புக்கு பின் இந்த பேரண்டம் உருவானது என்று கூறப்படுகிறது. இந்த வெடிப்பு நிகழ்ந்த பொழுது அணுக்களுக்கு எடை இல்லை. ஆனால் இந்த அணுக்களுக்கு, 'ஹிக்ஸ் போசன்" என்ற கட்டத்தை கடந்த பின் தான் நிறை கிடைக்கிறது. முதலில், ஹிக்ஸ் போசனை கண்டுபிடிக்கும் முயற்சியை அமெரிக்கா தொடங்கியது. சரியான பலன் கிடைக்காததால் ஆராய்ச்சி கைவிடப்பட்டது.

ஐரோப்பிய அணு ஆராய்ச்சிக் கழகம் சோதனையை தொடங்கியது. இதற்காக செயற்கையாக பெரிய ஆட்ரான் மோதுவி என்னும் ராட்சத ஆய்வு கூடத்தில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது இந்த ஆராய்ச்சியில் 125 கிகா எடை கொண்ட துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது ஹிக்ஸ் போசனாகத்தன் இருக்க வேண்டும் என்கின்றனர் விஞ்ஞானிகள். இக்கண்டுபிடிப்பு வெறும் ஆரம்ப கட்டம் தான். விஞ்ஞானிகள் போக வேண்டிய தூரம் நிறைய இருக்கிறது.

**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# சிறுவர் அமுதம்

## நிலாப்பாட்டு



வட்டமான தட்டுப் போல்
வானத்திலே வெண்ணிலா
தொட்டுப் பார்க்க
வேண்டுமென்று
தோன்ற வைக்கும்
வெண்ணிலா
குட்டித் தம்பி சாதம் உண்ணக்
கூப்பிடும் வெண்ணிலா
எட்டிநிற்கும் மேகத்துள்ளே
ஒளிய வேண்டாம்
வெளியில் வா!

## பதறாத காரியம் சிதறாது

### பழமொழி

எந்த விடயத்தையும் செய்யத் தொடங்குமுன் அதற்குத் தேவையான உபகரணங்களை ஆயத்தம் செய்து கொள்வது போல சரியான நேரம், சூழ்நிலையையும் கவனத்தில் எடுக்க வேண்டும். அவசரப்பட்டு ஒரு வேலையைத் தொடங்கி விட்டு அதனைச் சரியாகச் செய்து முடிக்காமல் மனம் கஷ்டப்படுவதும் அழுவதும் ஏன்? எதனையும் முற்கூட்டியே திட்டமிட்டு நிதானமாக வேலையைச் செய்வதால் வெற்றிகரமாக நிறைவேறலாம். இதனையே எமது முன்னோர்கள் பழமொழியால் குறிப்பிட்டுள்ளார்கள். முன்னோர்களின் பண்பு காரணமாக "பதறியடித்து காரியத்தைக் கெடுக்காதே" என்று முகத்திலறைந்து சொல்லாமல் நாசூக்காக சொல்லிவைத்திருக்கிறார்கள்.

**சுடோக்கு எண் 12 விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 8 | 5 | 4 | 6 | 9 | 2 | 3 |
| 4 | 3 | 2 | 9 | 8 | 1 | 7 | 5 | 6 |
| 5 | 9 | 6 | 7 | 2 | 3 | 4 | 1 | 8 |
| 8 | 4 | 7 | 3 | 1 | 2 | 6 | 9 | 5 |
| 1 | 2 | 3 | 6 | 9 | 5 | 8 | 7 | 4 |
| 6 | 5 | 9 | 4 | 7 | 8 | 1 | 3 | 2 |
| 2 | 6 | 1 | 8 | 3 | 9 | 5 | 4 | 7 |
| 3 | 7 | 5 | 1 | 6 | 4 | 2 | 8 | 9 |
| 9 | 8 | 4 | 2 | 5 | 7 | 3 | 6 | 1 |

**சுடோக்கு எண் 13**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | | | | | | 1 |
| 5 | | | | 7 | | | | |
| | 4 | | | 2 | | | | 8 |
| | 6 | | 2 | | | 8 | | 3 |
| | 2 | 1 | | | | 4 | 9 | |
| 3 | | 9 | | | 6 | | 1 | |
| 6 | | | | 5 | | | 4 | |
| | | | | 3 | | | | 7 |
| 9 | | | | | | 5 | | |

# அம்பிகையின் அருட்கடாட்சம் பெறுவதற்குரிய ஆடிப்பூரம்



எல்லாம் வல்ல சிவபெருமானின் சக்தியாகிய உமையவளுக்குரிய மகிமை மிக்க விரத மாகிய ஆடிப்பூரம் இன்று அனுட்டிக்கப்படுகிறது. ஆடிப்பூர விரதமானது ஆதிபராசக்தியாக மிளிரும் அம்பிகை ருதுவாகிய தினமாகக் கருதப்பட்டு சைவ மக்களால் பெரிதும் விரும்பிப் போற்றப்படும் மகத்துவம் நிறைந்தது.

சிவபெருமான் ஆன்மாக் களின் மீது கொண்ட அளவற்ற கருணையினால் "பஞ்சகிருத்தியம்" எனப் போற்றப் பெறும் ஐந்தொழில் களையும் புரிகின்றார். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் இவற்றைச் சிவன் தமது சக்தியைக் கொண்டே செய்விக்கிறார். 'சக்தியில்லை யேல் சிவமில்லை', சக்தி இருந்தால் செய், இல்லையேல் சிவனே என்று இரு' என்பன மகாவாக்கியங்களாகும்.

ஆடிப்பூர விரதத்தை அனுட்டிப்பதன் மூலம் ஆதி பராசக்தியான அம்பிகையின் பேரருட் கருணைக்குப் பாத்திரமாகிய இவ்வுலகில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று சுகபோகம் அனுபவிக்கலாம் என்பது ஆன்றோர் கருத்து.

ஆடிப்பூர விரதத்தை அனுட்டிப்போர் காலையில் புனித நீராடி தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து சந்தியாவந்தனம் முடித்து அம்பாள் ஆலயத்துக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தல் உத்தமம். அத்துடன் அம்பிகைக்கு நடைபெறும் ருதுசாந்தி வைபவத்திலும் கலந்து கொண்டு சிவ சிந்தனையுடன் பொழுதைக் கழித்தல் வேண்டும். அம்பிகையின் ருதுசாந்தி வைபவம் பார்த்தால் வீட்டில் இலட்சுமீகரம் துலங்கும் என்பது நம்முன்னோர் கருத்து.

ஆடிப்பூரம் மிகச் சிறந்த விரதம் என்ற காரணத்தால் விண்ணுலகத் தேவர்களும் முனிவர்களும் ரிஷிகளும் கூட இவ்விரதத்தை அனுட்டித்து அம்பிகையின் அருள் பெற்றதாகப் புராண வரலாறுகள் குறிப்பிடுகின்றன. ஆடிப்பூர நன்னாளில் அம்பிகையைப் பணிந்து அவளுடைய பத்ம மலர்ப் பாதங்களைச் சிந்தித்து வந்தித்துச் சேவித்தால் இவ்வுலகில் சகல சௌபாக்கியங்களுடனும் வாழலாம்.

தனந் தருவாள், ஒருநாளும் தளர்வறியா மனந் தருவாள், தெய்வ வடிவுந் தருவாள், கல்வி தருவாள், நல்ல எல்லாந் தருவாள் என்று பக்தியுடன் பணிந்தேத்தி வழிபாடியற்றி ஆடிப்பூர விரதமிருப்பின் உத்தம நல்வாழ்வு கிடைக்கும். அத்துடன் கலையாத கல்வியும், குறையாத வயதும், கபடு வாராத நட்பும், கன்றாத வளமையும், குன்றாத இளமையும், தவறாத சந்தான மும், தாழாத கீர்த்தியும், தடைகள் வாராத கொடையும், தொலையாத நிதியமும், ஒரு துன்பமில்லாத வாழ்வும் பெற வேண்டுமாயின் ஆடிப்பூர நன்னாளில் அம்பிகையைப் பணிந்து விரதங்காத்து வழிபாடியற்றுதல் வேண்டும்.

இந்த விரதம் நோற்பவர்கள் மதியம் ஒரு பொழுதுண்டு இரவு பால் பழம் அருந்தலாம். சிவனடியார் ஒருவருக்கு அமுதளித்து அன்னதானஞ் செய்வதன் மூலம் உத்தம பலன் கிடைக்கும்.

எனவே, இன்றைய இந்த ஆடிப்பூர விரதத்தை அனுட்டித்து அம்பிகையின் இன்னருளைப் பெற்று நல்வாழ்வு வாழ நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக!

*கலாபூஷணம்*
*இராசையா ஸ்ரீதரன்.*

## அனலைதீவு ஹரிகர புத்திரர் மகோற்சவம்

அனலைதீவு நயினாகுளம் கூழா வடியுறை அருள்மிகு பூர்ணா தேவி புஷ்கலாதேவி சமேத ஹரிகர புத்திர ஐயனார் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா இன்று (23ஆம் திகதி) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும், மறுநாள் ஆகஸ்ட் முதலாம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெற விருக்கிறது.

உரும்பிராய் பர்வதவர்த்தினி அம்மன் கோயில் பிரம்மஸ்ரீ க.மு.சோமசுந்தரக் குருக்கள் மகோற்சவகால குருவாகவும், ஆலய குரு சிவஸ்ரீ ச.ஸ்ரீநந்தன சர்மா இவருக்கு உதவியாகவுமிருந்து, மகோற்சவ கிரியைகளை நிறைவேற்றிவைப்பார்கள். (க)

## வட்டுக்கோட்டை கண்ணகை ஆலய மகா சங்காபிஷேகம்

வட்டுக்கோட்டை கண்ணகி ஆலய மகா சங்காபிஷேகம் இன்று வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் கண்ணகி அம்மனுக்கும், கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரப் பெருமானுக்கும் ஆடிப்பூர நாளாகிய இன்று மகா சங்காபிஷேகப் பெருவிழா நடைபெறுகிறது.

காலை 7.00 மணிக்கு சங்கு பூஜை, விசேட ஹோமம், தீபாராதனையுடன் ஆரம்பமாகி சங்காபிஷேகம் நடைபெற்று, பகல் 11.30 மணியளவில் அம்பாளுக்கு ஆடிப்பூர ருதுசாந்தி வைபவமும் இடம் பெறும்.

ஆலய சங்காபிஷேக கிரியைகளை பிரதம குருவாக ஊரெழு சிவஸ்ரீ சோ.வாகீஸ்வரக் குருக்கள், ஆலய குருமார்களான சிவஸ்ரீ ச.நடேசக் குருக்கள், சிவஸ்ரீ ந.யசோதர சர்மா ஆகியோருடன் ஏனைய சிவாச்சாரியப் பெருமக்களும் இணைந்து நடாத்தி வைப்பார்கள்.

இரவு 7.00 மணிக்கு இடம்பெறும் வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து திருவூஞ்சல் உற்சவம் நடைபெற்று, தொடர்ந்து சுவாமி வீதியுலா வருதலும் இடம்பெறும்.

பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு கொண்டதாக சொல்லப்படும் இந்த ஆலயத்தை, போர்த்துக்கீசப் படைகள் இடித்தழிக்க முற்பட்ட போது இது மாதா கோயிலாகக் காட்சியளித்ததால் இதனை அழிக்காது சென்ற புதுமையை இங்கே காணக்கூடியதாக இருந்ததாக தெரிய வருகிறது. இத்தகைய அற்புத நிகழ்வுக்குரிய ஆலய மாதாவால், இங்கு எழுந்தருளியிருக்கும் மகத்துவம் வாய்ந்த அம்பாளை அடியார்கள் என்றென்றும் பக்திபூர்வமாக போற்றித் துதித்து வருகிறார்கள். (க)

## வங்களாவடி தீர்த்தோற்சவம்

(தீவகம்)

வேலணை வங்களாவடி முருகன் ஆலயத்தின் தீர்த்தோற்சவமானது கடந்த 18ஆம் திகதி புதன்கிழமை வேலணை வெள்ளைக் கடற்கரையில் நிறைவேற்றி வைக்கப் பட்டன.

புதன்கிழமை அதிகாலை ஆலயத்தில் விசேட பூசைகள் வழிபாடுகள் நடைபெற்று முருகப் பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராய் ஊர்வலமாக வெள்ளைக்கடற் கரைக்குச் சென்று தீர்த்தமாடி மீண்டும் சந்நிதானம் வந்தடைந்தார்.

தீர்த்தோற்சவத்தில் பெருமளவிலான மக்கள் கலந்துகொண்டு தீர்த்தமாடி சென்றனர். சிறுவர் முதல் பெரியோர்கள் வரை வயது வித்தியாசம் இல்லாதவகையில் தீர்த்தோற்சவ வைபவத்தில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கழுகுக் கண்கள்



ஆகாயத்தில் எதிரிகளின் தாக்குதல்கள் எதுவுமற்ற இன்றைய சூழ்நிலையில் நின்மதியாகப் பறந்து கொண்டிருந்த எனக்கு, இனிமேல் மிகவும் அவதானமாக பறக்க வேண்டிய ஒரு சூழ்நிலை விரைவில் ஏற்படப்போகிறது.

இப்போது நாட்டில் மூன்று பிரதான விமான நிலையங்களே அதிகமாக விமான சேவையை நடத்தி வருகின்றன. கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம், இரத்மலானை விமான நிலையம், பலாலி விமான நிலையம் ஆகியவற்றில் இருந்தே விமானங்கள் பறந்து செல்வதுண்டு.

இயற்கை அன்னை எனது கண்களுக்குக் கொடுத்த ராடர் கருவி கச்சிதமாக செயற்படுகின்ற காரணத்தினால் ஒரு விமானம் 10 கிலோ மீற்றருக்கு அப்பால் இருக்கும் போதே அது வருகின்ற பாதையையும் பறக்கின்ற உயரமும் எனக்குத் தெரியும். அதனால் அநாவசியமாக அவற்றுடன் மோதி உயிராபத்தை ஏற்படுத்தாத வகையில் நான் அந்த விமானத்தைக் தவிர்த்து மாற்றுப் பாதையில் பறந்து செல்வேன்.

இன்று விமான சேவைகள் சிறந்த முறையில் வியாபித்துள்ளன. இலங்கையில் தற்போது கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம், இரத்மலானை விமான நிலையம், பலாலி விமான நிலையம், இங்குராங்கொட விமான நிலையம், திருகோணமலையில் சீனன்குடா விமான நிலையம், அனுராதபுரம் விமான நிலையம், மட்டக்களப்பு ஆகியன செயற்பட்டு வருகின்றன.

நாட்டில் அமைதி நிலவுவதனால் இவை சிவில் விமானப் போக்குவரத்துச் சேவைகளை வழங்கும் விமான நிலையங்களாக மாற்றப்பட்டு வெளிநாட்டு, உள்நாட்டு விமானப் பயணிகளின் நன்மைக்காகப் பயன்படுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாம் ஆசியாவின் அதிசயத்தை பயணத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இலங்கையின் சிறிலங்காவின் எயார்லைன்ஸ் விமான சேவைக்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளது. எமது விமான சேவை 22 நாடுகளுக்கு தனது சேவையை வழங்கி வருகின்றது.

தென்னிலங்கையில் மத்தல விமான நிலையத்தையும் சர்வதேச தரத்திற்கு அபிவிருத்தி செய்யும் பயணிகள் வேகமாக மேற்கொள்ளப் படுகின்றன. இதன் மூலம் இலங்கைக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரிக்கும் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

தற்போதுள்ள விமான நிலையங்களுக்கு மேலதிகமாக இன்னும் 10 உள்ளூர் விமான நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. இதில் நுவரெலியா விமான நிலையம் முதல் இடத்தை பெறுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு நாடு அபிவிருத்தி அடையும் போது அந்நாட்டின் மக்களின் உள்ளூர்ப் பயணங்களை துரிதப்படுத்துவது அவசியமாகும். அதன் மூலமே அந்நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையும்.

இந்த நோக்கத்திற்காகவே இப்போது தரைப் பாதைகளையும், படகு கப்பல் சேவைகளையும் விஸ்தரிப்பதுடன் உள்ளூர் விமான சேவையையும் சீராக நடத்துவதற்கு திட்டங்களை வகுத்து அவற்றை வெற்றிகரமாக செயற்படுத்தி வருகின்றது.


இன்னும் ஓரிரு ஆண்டுகளில் என்னைப் போன்ற கழுகுகளுக்கு ஆகாயத்தில் பாதுகாப்பாக பறந்து செல்வதற்கு இந்த புதிய விமான நிலையங்கள் பெரும் அச்சுறுத்தலாக அமைந்தாலும் மனித குலத்தின் மேம்பாட்டுக்காக நற்பணியை செய்வதே எனது கடமை என்பதில் நம்பிக்கை வைத்துள்ள இந்த கழுகுக் கண்கள் அந்த அச்சுறுத்தல்களைப் பற்றி அலட்டிக் கொள்ளாமல் விமானப் பாதையை தவிர்த்துக் கொண்டு நாடெங்கிலும் பறந்து, பிழை செய்பவர்களை கண்டு பிடிக்கும் பணியை தொடர்ந்து செய்யத் தயாராக இருக்கின்றேன்.

# ஜேர்மனியில் அகதிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகை அதிகரிப்பு

ஜேர்மனியில் அகதிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகை தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் அரசியல் உரிமை நீதிமன்றத்தின் துணைத் தலைவர் ஃபெர்டினாண்ட் கிர்க் லோஃப் கூறுகையில், ஜேர்மனியில் இனி மேல் அகதிகளுக்கும், வேலையில்லா இளைஞர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் 364 யூரோ வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

இதனால் கடந்த 1993ஆம் ஆண்டு முதல் வழங்கி வந்த தொகையான 220 யூரோ, தற்போது 364 யூரோவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.



இத்திட்டத்தின் மூலம் கடந்த 2010ஆம் ஆண்டில் உதவித் தொகை பெற்ற வேலையில்லா இளைஞர்களின் எண்ணிக்கை மொத்தம் 130,000 பேர் ஆகும். தற்போது இதில் புகலிடம் நாடி வந்தவர்களும் சேர்கின்றனர்.

இவர்கள் பெற்று வந்த 220 யூரோ அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யாது என்று நார்த் ரைன்-வெஸ்ட்ஃபோலியா மாகாணத்தில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

இதன் காரணமாகவே தற்போது உதவித் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# வட கொரியாவின் ஏவுகணைகளை இரகசியமாக விற்க முயன்ற நபருக்கு சிறை



வட கொரியாவின் ஏவுகணைகளை இரகசியமாக விற்க முயன்ற நபருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து நாட்டை சேர்ந்த சர்வதேச ஆயுத வியாபாரி மிக்கேல் ராஞ்சர்.

இவர் ஹாங்காங்கில் தனது காதலி பெயரில் வியாபார நிறுவனத்தை தொடங்கி ரகசியமாக ஆயுதம் விற்பனை தொழில் நடத்தியதாக தெரியவந்தது.

தரையில் இருந்து வானத்திற்கு சென்று தாக்கும் ஏவுகணைகளை வட கொரியாவில் இருந்து வாங்கி அவற்றை அஜெர்பைஜான் நாட்டிற்கு விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டார்.

மேலும் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட நவீன துப்பாக்கிகளையும் விற்பனை செய்தார்.

இதனையொட்டி தொடரப்பட்ட வழக்கில் இங்கிலாந்து நீதிமன்றம் அவருக்கு 3 1/2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இந்த தகவலை இங்கிலாந்து புலனாய்வு துறையினர் வெளியிட்டுள்ளனர்.

# பாகிஸ்தானில் ஒசாமா பின்லேடன் வாழ்ந்த இடம் பொதுச் சொத்தாகிறது

ஒசாமா பின்லேடன் கொல்லப்படுவதற்கு முன் இறுதியாக வாழ்ந்த இடத்தைப் பொதுச் சொத்தாக அறிவிக்க, பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.

பாகிஸ்தானில் அபோதாபாத் பகுதியில் உள்ள காரிசன் எனுமிடத்தில் பதுங்கி வாழ்ந்த அல் கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடன், அமெரிக்க கடற்படை சீல் பிரிவினரால் கடந்தாண்டு ஆண்டு மே மாதம் கொல்லப்பட்டார். அந்த இடத்தில் 5 ஆண்டுகள் ஒசாமா வாழ்ந்திருக்க வேண்டும் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

ஒசாமா பதுங்கியிருந்த வளாகம் கடந்த பிப்ரவரி மாதத்தில் பாகிஸ்தான் இராணுவத்தால் இடிக்கப்படும் வரை, அதனை ஏராளமான மக்கள் பார்த்துச் சென்றனர்.

அந்த இடம் நினைவிடமாக ஆக்கப்படக்கூடும் என்ற அஞ்சமும் இருந்தது. இதையடுத்து ஒசாமா கடைசியாக வாழ்ந்த இடத்தை பொதுச் சொத்தாக அறிவிக்க பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.



வடமேற்கு கைபர்- பாக்துன்க்வா மாகாண அரசு இது தொடர்பாக பத்திரிகைகளில் நோட்டீஸ் வெளியிட்டுள்ளது. அதில், அபோதாபாத்தில் உள்ள அந்த இடத்தை பொதுச் சொத்தாக அறிவிப்பதில் யாருக்கேனும் ஆட்சேபம் இருப்பின் 15 தினங்களுக்குள், மாவட்ட வருவாய் அலுவலரைத் தொடர்பு கொள்ளலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆட்சேபணை இல்லாவிடில் பொதுச் சொத்தாக அறிவிக்கப்பட உள்ளது. அந்த இடம் எதற்குப் பயன்படுத்தப்படும் என்பது பற்றி அதிகாரபூர்வ தகவல்கள் எதுவுமில்லை.

ஆவணங்களின் படி, அந்த இடம் முகமது அர்'த் என்பவரின் பெயரில் உள்ளது. ஒசாமா கொல்லப்பட்ட போது முகமது அர்ஷத்தும் கொல்லப்பட்டரர்.

# நெருப்புக் கோழி பறவையல்ல, விலங்கு: பாகிஸ்தான் சட்டசபையில் வினோதம்



நெருப்புக் கோழி பறவையல்ல, விலங்கு என்று பாகிஸ்தானில் பஞ்சாப் மாநில சட்டசபையில், ஒரு நூதன தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஏனெனில் பறவை போன்று அதனால் பறக்க முடியாது. எனவே, அது ஒரு விலங்கு என கருத்தில் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த தீர்மானம் எம்.எல்.ஏ.க்களின் ஓட்டெடுப்புக்கு விடப்பட்டு வெற்றி பெற்றது. இதை பஞ்சாப் மாநிலம் ஏற்கனவே அறிவித்து கவர்னரின் ஒப்புதலுக்கு அறிவித்திருந்தது. அதை ஏற்க மறுத்த அவர் கையெழுத்திடவில்லை.

எனவே, சட்டசபையில் தீர்மானம் இயற்றி அமோகமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த சர்ச்சை குறித்து பாகிஸ்தான் சட்ட மந்திரி ராணா சனா கூறும்போது, ஆடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வரிசையில் நெருப்புக் கோழியையும் விலங்குகள் வரிசையில் கொண்டு வந்துள்ளோம்.

ஏனெனில் இங்கு இறைச்சியின் தேவை அதிகரித்துள்ளது. நெருப்பு கோழியின் இறைச்சியை உலகம் முழுவதும் மக்கள் விரும்பி சாப்பிடுகின்றனர். எனவே, அதற்கு பண்ணை அமைத்து உற்பத்தியை பெருக்கி மக்களின் இறைச்சி தேவையை இதன்மூலம் பூர்த்தி செய்ய முடியும் என்றார்.

# உலக பார்வை

## நான் பேட்மேனின் பரம எதிரி: 12 பேரை கொன்ற மர்ம மனிதன் பரபரப்பு வாக்குமூலம்



அமெரிக்க தியேட்டரில் துப்பாக்கிச் சூடு நடத்தி 12 பேரை கொன்ற வாலிபர், நான் பேட்மேனின் பரம எதிரி ஜோக்கர் என்று வாக்குமூலம் அளித்துள்ளான்.

அமெரிக்காவின் கொலராடோ மாகாணம் டென்வர் புறநகரில் செஞ்சுரி 16 என்ற தியேட்டர் உள்ளது.

இங்கு தி டார்க் நைட் ரைசஸ் என்ற புதிய படம் வெளியிடப்பட்டது. இது சூப்பர் ஹீரோ பட வரிசையில் அமைந்த பேட்மேன் பற்றிய கதை.

கடந்த 19ஆம் திகதி நள்ளிரவு தியேட்டரில் படம் ஓடிக் கொண்டிருந்தது. தியேட்டரில் குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், வாலிபர்கள் என கூட்டம் நிரம்பி வழிந்தது.

அப்போது ஜேம்ஸ் ஹோம்ஸ் என்ற 24 வயது வாலிபர், திடீரென வெடிகுண்டுகளை வீசி சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினான். இதில் 12 பேர் பரிதாபமாக இறந்தனர். 59 பேர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த தாக்குதல் நடந்த பின் தியேட்டரை விட்டு வெளியேறி கார் பார்க்கிங் பகுதியில் அமைதியாக நின்று கொண்டிருந்த ஜேம்சை பொலிசார் கைது செய்தனர்.

இதுகுறித்து அரோரா பொலிஸ் தலைவர் டேனியல் ஓட்ஸ் கூறியதாவது, ஜேம்ஸ் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 12 வயது சிறுவன் உள்பட 12 பேர் பலியாகி உள்ளனர். மேலும் 3 மாத குழந்தை, 6 வயது குழந்தை உள்பட 59 பேர் காயம் அடைந்துள்ளனர்.

நள்ளிரவு காட்சிக்கு குழந்தைகளையும் சிறுவர்களையும் அழைத்து வந்திருந்தது துரதிருட்டவசமானது. 4 துப்பாக்கிகளில் ஜேம்ஸ் தாக்குதல் நடத்தி உள்ளான். டிக்கெட் வாங்கி கொண்டுதான் தியேட்டருக்குள் நுழைந்துள்ளான்.

விசாரணையின் போது, தான் ஒரு ஜோக்கர் என்று கூறியிருக்கிறான். காமிக்ஸ் கதைகளில் பேட்மேனின் முக்கிய எதிரி இந்த ஜோக்கர். தியேட்டருக்குள் நுழைந்த போது அந்த ஜோக்கர் போலவே முகமூடி அணிந்து வந்துள்ளான்.

தலை முடிக்கு சிவப்பு வண்ணம் பூசியிருந்தான். அரோராவில் உள்ள அவனுடைய வீட்டில் நிறைய வெடிபொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

தீவிர விசாரணையில் கொலராடோ மருந்துவ பல்கலைக்கழகத்தில் அவன் படித்து வந்ததும், கடந்த ஜுன் மாதம் படிப்பை நிறுத்திவிட்டதும் தெரியவந்துள்ளது.

கடந்த 5ஆம் திகதி அடல்ட் பிரண்ட் பைன்டர் பேஜ் என்ற இணையத்தளத்தை தொடங்கி உள்ளான். அதில் கிளாசிக் ஜிம்போ என்று தன்னை பற்றி குறிப்பிட்டு படங்களை வெளியிட்டுள்ளான்.

அந்த படங்கள் ஜேம்ஸ் போலவே உள்ளன. எதற்காக துப்பாக்கிச் சூடு நடத்தினான் என்பது இன்னும் தெரியவில்லை.

பேட்மேன் கேரக்டர்களில் அவன் மிகவும் ஒன்றியிருப் பதோடு, மனநிலை பாதிக்கப்பட்டவன் போலவே காணப்படுகிறான். இதுகுறித்து தொடர்ந்து விசாரணை நடக்கிறது என்று தெரிவித்தார்.



லண்டன் ஒலிம்பிக்கில் கலந்து கொள்ள புறப்பட்டுச்செல்லும் ரஷ்யநாட்டு குழுவினரிடம் கலந்துரையாடுகிறார் அந்நாட்டு அதிபர் விளாடிமிர் புடின் .

## மற்ற மதத்தினருக்கு சவுதியில் கட்டுப்பாடுகள்

ரம்ஜான் மாதம் தொடங்கி விட்டதால், மற்ற மதத்தினர் வெளி இடங்களில் சாப்பிடுவதோ, புகைப்பதோ, குடிப்பதோ கூடாது என சவுதி அரேபிய அரசு தெரிவித்துள்ளது.

ரம்ஜான் நோன்பு சவுதி அரேபியாவில் நேற்று முன்தினம் தொடங்கியது.

இதுகுறித்து சவுதி அரேபிய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சவுதியில் தங்கியுள்ள மற்ற மதத்தினர் முஸ்லிம்களின் ரம்ஜான் நோன்பை மதிக்க வேண்டும்.

விரத காலங்களில் குறிப்பாக பகல் பொழுதில் வெளியிடங்களில் சாப்பிடுவதோ, குடிப்பதோ, புகைப்பதோ கூடாது.மீறி இது போன்ற செயல்களில் ஈடுபடுபவர்கள், நாட்டை விட்டு வெளியேற்றப்படுவார்கள் என எச்சரித்துள்ளது.

# காவிரி நதி நீர் ஆணையத்தை கூட்ட வலியுறுத்தல்: தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மனு

காவிரி நதி நீர் ஆணையத்தை உடனடியாகக் கூட்ட உத்தரவிட வேண்டும் என தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் நேற்று மனு தாக்கல் செய்தது.

வறட்சிக் காலத்தில் தமிழகத்துக்கான நீர்ப் பங்கீட்டை கர்நாடக அரசு உடனடியாக வழங்க உத்தரவிட வேண்டும் என்றும் தமிழக அரசு தனது மனுவில் வலியுறுத்தியுள்ளது.

**மனுவின் விவரம்:** காவிரி நீர் பங்கீடு தொடர்பாக கடந்த காலங்களில் உச்ச நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவையும், காவிரி கண்காணிப்பு ஆணையம் பிறப்பித்த உத்தரவையும் கர்நாடக அரசு ஏற்க மறுத்து வருகிறது.


தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நீர்ப் பங்கீடு தொடர்பாக இரு மாநில அரசு தலைமைச் செயலர்களுக்கு இடையே கடந்த ஆண்டு ஜனவரி 28ஆம் திகதி நடைபெற்ற பேச்சுவார்த்தையில் எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை.

அதன் பின்னர் பிரதமர் தலைமையிலான காவிரி நதி நீர் ஆணையத்தை உடனடியாக கூட்ட வேண்டும் என்று மே 18ஆம் திகதி, பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழக முதல்வர் கடிதம் எழுதினார். இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இந்த ஆண்டு தமிழகத்தின் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தென்மேற்குப் பருவ மழை தொடங்காத காரணத்தால் வறட்சி நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கெனவே, காவிரி நதி நீர் தீர்ப்பாயத்தின் இடைக்கால உத்தரவுப்படி தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நீரையும் கர்நாடகம் வழங்கவில்லை.

இதுபோன்ற குறிப்பிட்ட வறட்சிக் காலங்களில் தமிழகத்துக்கு



வழங்க வேண்டிய நீரின் அளவு குறித்தும் ஒப்பந்தத்தில் தனியாக குறிப்பிடவில்லை.

2012-13ஆம் ஆண்டுகளில் கர்நாடகத்தின் காவிரி நீர்ப் பிடிப்பு பகுதிகளில் தென்மேற்கு பருவ மழை குறைவாகக் காணப்பட்டாலும், கர்நாடகத்தில் உள்ள 4 அணைகளில் கடந்த வெள்ளிக்கிழமை (ஜூலை 20ஆம் திகதி) வரை 21.9 டி.எம்.சி. தண்ணீர் வந்தது.

ஆனால், கர்நாடக அரசு இந்த நீரை தமிழகத்துக்கு வழங்காமல் 4 அணைகளிலும் தேக்கி வைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

கிருஷ்ணராஜ சாகர் அணையில் உள்ள நீரை அந்த மாநில பாசனத்துக்காக கர்நாடக அரசு தொடர்ந்து வெளியேற்றி வருகிறது.

இதனால் காவிரி நதிநீர் தீர்ப்பாயத்தின் இடைக்கால உத்தரவுப்படி ஜூலை 20ம் திகதி வரை தமிழகத்தின் மேட்டூர் அணைக்கு வந்து சேர வேண்டிய 36.15 டி.எம்.சி. நீர் கிடைக்கவில்லை. இதனால், குறுவை சாகுபடிக்காக ஜூன் 12ஆம் திகதி திறக்கப்பட வேண்டிய மேட்டூர் அணை இன்னமும் திறக்கப்படவில்லை.

தமிழகத்தில் 45 சதவீத சாகுபடி காவிரி நீரால் மேற்கொள்ளப்படுகிறது. பருவ மழையைக் காரணம் காட்டி, இது போன்ற வறட்சிக் காலங்களில் தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நீரைக் கர்நாடகம் வழங்காமல் இருக்கக் கூடாது.

இதனால், தமிழகத்தின் விவசாயம் பாதிக்கப்படுவதுடன் மாநிலத்தின் பொருளாதாரமும் பாதிக்கப்படும். நாட்டுக்குத் தேவையான உணவு தானிய உற்பத்தி குறையும்.

ஆகையால், இந்த வறட்சி காலத்தில் தனது அணைகளில் நீரை சேமித்து வைப்பதைத் தவிர்த்து, தற்போதுள்ள நீர் வரத்தை வைத்தே தமிழகத்துக்கு உடனடியாக தண்ணீர் திறந்து விட கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும்.

நீர்ப் பங்கீடு தொடர்பாக காவிரி கண்காணிப்புக் குழு அளித்துள்ள உத்தரவை நிறைவேற்ற உதவும் வகையில், காவிரி நதி நீர் ஆணையத்தை உடனடியாகக் கூட்ட உத்தரவிட வேண்டும்.

24-வது காவிரி கண்காணிப்புக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை காவிரி நதிநீர் ஆணையத்திடம் வழங்க உத்தரவிட வேண்டும் என்றும் தமிழக அரசு தனது மனுவில் வலியுறுத்தியுள்ளது.

காவிரி நதி நீர்ப் பங்கீடு தொடர்பாக 1991ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசு பிறப்பித்த உத்தரவுகளையும், இது தொடர்பாக மத்திய அரசுக்கு தமிழக அரசு எழுதிய கடிதங்களையும் தமிழக அரசு தனது மனுவில் இணைத்து உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

பிரதமர் தலைமையிலான காவிரி நதி நீர் ஆணையத்தில் தமிழகம், கர்நாடகம், கேரளம், புதுவை முதல்வர்கள் உறுப்பினர்களாக இடம்பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய செய்திகள்

## நேதாஜி படையில் இடம்பெற்றிருந்த 97 வயது பெண்மணியின் உடல்நிலை கவலைக்கிடம்

நேதாஜி சுபாஷ் சந்தரபோஸின் படையில் இடம்பெற்றிருந்த முன்னாள் இராணுவ வீராங்கனையான லஷ்மி சேஹ்க லின்(வயது 97), உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்திய சுதந்திரத்திற்காக பாடுபட்ட தலைவர்களுல் நேதாஜி சுபாஷ் சந்தரபோஸ் முக்கிய பங்காற்றியவர்.

இரண்டாம் உலகப் போர் சமயத்தில் வெளிநாடுகளில் போர்க் கைதிகளாய் இருந்த நூற்றுக் கணக்கான இந்தியர்களை ஒன்று திரட்டி இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கி அப்போது இந்தியாவை ஆட்சி செய்த ஆங்கிலேயர்க்கு எதிராகத் தாக்குதல் நடத்தியவர்.



இந்த இந்திய தேசிய இராணுவத்தில் லஷ்மி சேஹ்கல் முக்கிய பங்காற்றியுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு, மாரடைப்பால் அவதிப்பட்ட லஷ்மி சேஹ்கல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தற்போது அவருடைய உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளன.



குஜராத் மாநில முதல்வர் நரேந்திர மோடி (வலது) பாஜ.மூத்த தலைவர்களில் ஒருவரான அத்வானியை சந்தித்துப் பேசினார்.

# மும்பை தாக்குதல் பயங்கரவாதிக்கு வரும் 31ஆம் திகதி வரை பொலிஸ் காவல்

மும்பைத் தாக்குதல் வழக்கின் முக்கிய குற்றவாளி அபு ஜுண்டால், நேற்று மும்பை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். அவரை வரும் 31ஆம் திகதி வரை பொலிஸ் காவலில் வைக்க மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

மும்பைத் தாக்குதல் வழக்கின் முக்கிய குற்றவாளி அபுஜுண்டால், சவுதி அரேபிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நாடு கடத்தப்பட்ட அவரை டில்லி பொலிஸார், ஒரு வழக்குத் தொடர்பாக கைது செய்து விசாரித்தனர். அவரிடம் நடத்திய விசாரணையில், மும்பையில் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளுக்கு



இந்தி கற்றுக் கொடுத்ததும், தாக்குதலின் போது, பாகிஸ்தான் கராச்சியில் அமைக்கப்பட்ட கட்டுப்பாட்டு அறையிலிருந்து பயங்கரவாதிகளுக்கு உத்தரவு பிறப்பித்ததும் தெரியவந்தது. இந்நிலையில், டில்லி பொலிஸ் காவலில் இருந்த அபு ஜுண்டாலை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என, மும்பைத் தாக்குதல் வழக்கை விசாரித்து வரும் மும்பை பொலிஸார் கோரினர். இதையடுத்து, ஜுண்டாலை மும்பை பொலிஸாரிடம் ஒப்படைக்க டில்லி நீதிமன்றம் உத்தரவிட்டது.

டில்லியிலிருந்து மும்பை அழைத்துவரப்பட்ட அபு ஜுண்டாலை, மும்பைத் தாக்குதல் வழக்கு தொடர்பாக கைது செய்த குற்றப் பிரிவு பொலிஸார், மும்பை நீதிமன்றத் தில், கூடுதல் பெருநகர மாஜிஸ் திரேட் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தினர். அவரை வரும் 31ஆம் திகதி வரை பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க, மாஜிஸ்திரேட் அனுமதி அளித்தார்.

# எங்கள் வழி தனி வழி: மம்தா பானர்ஜி சவால்

தங்களுக்குரிய மரியாதையை காங்கிரஸ் அளித்தால் மட்டுமே இனி கூட்டணியில் தொடர்வோம் என்று மேற்கு வங்க முதல்வரும் திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி தெரிவித்தார்.

கடந்த 1993 ஆம் ஆண்டு பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த 13 இளைஞரணி தொண்டர்களின் நினைவு தினம் நேற்று கொல்கத்தாவில் கடைபிடிக்கப்பட்டது.

இதையொட்டி கொல்கத்தா நகரில் நடைபெற்ற பிரமாண்ட பேரணியில் மம்தா பேசியது:

மேற்கு வங்கத்தில் யாருடைய



தயவு அல்லது கருணையில் வாழ வேண்டிய அவசியம் திரிணமூல் காங்கிரஸ் கட்சிக்கு இல்லை.

மாநிலத்தில் தனிப்பட்ட முறையில் முடிவுகளை எடுப்போம். மத்தியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் நமது கட்சி அங்கம் வகிக்கிறது. உரிய மரியாதை எங்கு கிடைக்கும் வரை கூட்டணியில் நீடிப்போம். இல்லையெனில் வெளியேறிவிடுவோம்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் நீடித்தாலும் மேற்கு வங்க மாநிலத்தில் இனிவரும் தேர்தல்களில் தனித்தே போட்டியிட முடிவு செய்துள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் இதற்கு மேற்கு வங்க மாநில காங்கிரஸ் தலைவர், பிரதீப் பட்டாசார்ஜி, மம்தாவின் இந்த அறிவிப்பு பற்றி கவலைப்படப் போவதில்லை என்றும் இதைச் சந்திக்க தயார் எனவும் தெரிவித்துள்ளார்.

# மனைவி யாரிடமும் செல்லாதிருக்க பூட்டுப்போட்ட கணவன்

தனது மனைவி வேறு யாரிடமும் போய் விடக் கூடாது என்பதற்காக அவரது மர்ம உறுப்பில் பூட்டுப் போட்டு பூட்டி வைத்திருந்தார் ஒரு கணவன்.

அந்த மிருக குணம் படைத்த நபரை பொலிஸார் கைது செய்து வழக்குத் தொடர்ந்துள்ளனர். முட்டாள்தனத்திற்கும், மூடத்தனத்திற்கும் அளவே இல்லாமல் போய் விட்டது.

இந்தூரைச் சேர்ந்த ஒரு மெக்கானிக், தனது மனைவி வேறு ஆணுடன் சேர்ந்து விடக் கூடாது என்பதற்காக அவரது மர்ம உறுப்பில் பூட்டுப் போட்டு பூட்டி வைத்துள்ளார். கடந்த நான்கு வருடமாக இந்த சித்திரவதையை அவர் செய்து வந்துள்ளார்.

இந்த மெக்கானிக்குக்கு கல்யாணமாகி 19 வருடங்களாகிறது. ஐந்து குழந்தைகள் உள்ளனர். நான்கு வருடங்களுக்கு முன்பு தனது மனைவியின் மர்ம உறுப்புக்கு அருகே துளை போட்டுள்ளார். பின்னர், தான் வெளியே போகும் போதெல்லாம் ஒரு பூட்டைப் பொருத்தி பூட்டி, சாவியை எடுத்துக் கொண்டு போய் விடுவாராம். இதனால் அந்தப் பரிதாபத்துக்குரிய பெண் சித்திரவதையையும், நரக வேதனையையும் அனுபவித்துள்ளார்.



சிறுநீர் கழிப்பதில் கூட அவருக்குப் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது. இந்த நரக வேதனையைப் பொறுக்க முடியாமல் தற்கொலை செய்ய முடிவெடுத்த அவர் எலிக்கு வைக்கும் விசத்தை எடுத்து சாப்பிட்டு விட்டார்.

உடனடியாக அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அப்போதுதான் அவரது மர்ம உறுப்பைச் சுற்றி பூட்டு போடப்பட்டிருப்பதை டாக்டர்கள் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்.

இதையடுத்து பொலிஸாருக்குத் தகவல் போனது. பொலிஸார் விரைந்து வந்து விசாரணை நடத்தினர். பின்னர் அந்த நபரை கைது செய்தனர்.

# வட மாகாண உதைபந்தாட்டம் இறுதியாட்டத்தில் கிளிநொச்சி-மன்னார்

வலிகாமம்

யாழ்.மாவட்ட அணியை வீழ்த்தி இறுதியாட்டத்திற்குள் நுழைந்தது கிளிநொச்சி மாவட்ட அணி.

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் மாவட்ட அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் சனிக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட அணிக்கும் கிளிநொச்சி மாவட்ட அணிக்கும் இடையே நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் கிளிநொச்சி மாவட்டம் யாழ். மாவட்ட அணிக்கு அதிர்ச்சி கொடுத்து 1:0 கோல்கள் எனும் முன்னிலையில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

கிளிநொச்சி மாவட்ட அணிக்கும் முல்லைத்தீவு மாவட்ட அணிக்கும் இடையே இடம் பெற்ற போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணி முதல் பாதி ஆட்டத்தில் இரண்டு கோலகளை பெற்று முன்னிலையில் நின்ற வேளையில் ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் தன்னை உற்சாகப்படுத்திக் கொண்ட கிளிநொச்சி மாவட்ட அணி மீண்டும் 04 கோலகளை பெற்று முன்னனியில் இருந்த வேளையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் கிளிநொச்சி மாவட்ட அணி 6:0 என்ற கோல் கணக்கில் முல்லைத்தீவு மாவட்ட அணியை வெற்றி பெற்று அரையிறுதியில் விளையாடத் தகுதி பெற்றது.

மன்னார் மாவட்ட அணிக்கும் வவுனியா மாவட்ட அணிக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் முதல் பாதி ஆட்டத்தில் மன்னார் மாவட்ட அணி நான்கு கோல்களை பெற்று முன்னிலையில் இருந்த நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் மைதானத்தில் மன்னார் மாவட்ட அணியின் கைகள்மேலோங்கிய நிலையில் நான்கு கோலகளை பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் மன்னார் மாவட்ட அணி வவுனியா மாவட்ட அணியை 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது.

# துவாரகனின் துல்லியமான பந்து வீச்சு கொக்குவில் இந்துவை வீழ்த்தியது யாழ்.இந்து.

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதுப் பிரிவிற்கான துடுப்பாட்டப் போட்டி ஒன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ் இந்துக்கல்லூரியும் மோதின.

இப் போட்டியில் நாணயற் சுழற்சியில் வென்ற கொக்குவில் இந்துக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்து துவாரகனின் பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்து 24.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 97 ஓட்டங் களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஓரளவு சிறப்பாக செயற்பட்ட சுஜீவன் 20ஓட்டங்களையும், சஜீபன் 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் துல்லியமாக பந்து வீசிய துவாரகன் 8.4 ஓவர்கள் பந்து வீசி 24ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும் ராகுலன், பானுகோபன் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். 98 என்னும் எளிதான வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி 16.1 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டை மாத்திரம் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. துவாரகன் ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களையும், உதயன் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பில் சஜீபன் 2 இலக்குகளை கைப்பற்றினர்.

நான்கு போட்டிகளிலும் வெற்றி பெற்ற யாழ்.இந்து அணி அடுத்த சுற்றுக்கு தெரிவாகியுள்ளது.

# ஜொனியன்ஸ் வென்றது

வலிகாமம்

இலங்கை கிரிக்கெட்டின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கு இடையே சனிக்கிழமை நடைபெற்ற பிரிவு 3 இற்கான கிரிக்கெட் போட்டி ஆட்டமொன் றில் யாழ்ப்பாணம் வட மாகாண வட மாகாண விளையாட்டுக்கழ கம் 6 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதமானத்தில் நடை-பெற்ற ஆட்டத்தில் வட்டுக்கோட்டை ஒல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை ஒல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழகம் 22.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 80 ஓட்டங்களை பெற்றது.

பிரிய லக்ஷின் 22 ஓட்டங்களை பெற்றதுடன் உதிர்களாக 21 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச்சேர்ந்த விதுசன் 2.4 ஓவாகள் பந்து வீசி 3 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் அகிலன் 5 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவருடன் 04 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக் களையும் லவேந்திரா 5 ஓவர்கள் பந்து வீசி 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் மயூரன் ரதீஸ்குமார் முறையே 17 22 ஓட்டங்களை கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

81 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் 15.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

விதுசன் 2 சிக்சர்கள் 06 பௌண்டறிகளுடன் 43 ஓட்டங்களை பெற்றதுடன் உதிரிகளாக 10 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஓல்ட் கோல்ட்டஸ் விளையாட்டக்கழகத்தைச் சேர்ந்த பிரிய லக்ஷன் திலிபன் நிரோஜன் தலா 4 ஓவாகள் பந்து வீசி முறையே 13 21 27 ஓட்டங்களை கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள்.

# இந்தியாவுக்கு முதல் வெற்றி



முதல் ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தில் 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தியது இந்தியா.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 314 ஓட்டங்களை குவித்தது. பின்னர் ஆடிய இலங்கை 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 293 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. அம்பாந்தோட்டையில் சனிக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியில் கம்பீர் 3 ஓட்டங்களில் ஆட்டமிழந்தாலும், சேவாக்-கோலி ஜோடி 2-வது விக்கெட்டுக்கு 173 ஓட்டங்கள் சேர்த்தது.

ஆட்டத்தின் தொடக்கத்தில் இருமுறை தப்பிப் பிழைத்த சேவாக், 97 பந்துகளில் 10 பௌண்டரிகளுடன் 96 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது துரதிருஷ்டவசமாக ரன்-அவுட் ஆனார். பின்னர் வந்த ரோஹித் சர்மா 5 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார். மறுமுனையில் தொடர்ந்து சிறப்பாக ஆடிய விராட் கோலி ஒருநாள் போட்டியில் தனது 12-வது சதத்தை நிறைவு செய்தார். கடைசி 5 போட்டிகளில் அவர் அடிக்கும் 4-வது சதம் இது. 113 பந்துகளில் 9 பௌண்டரிகளுடன் 106 ஓட்டங்கள் எடுத்தார் கோலி.

கடைசிக் கட்டத்தில் ரெய்னா 45 பந்துகளில் 1 சிக்ஸர், 3 பௌண்டரிகளுடன் 50, தோனி 29 பந்துகளில் 1 சிக்ஸர், 3 பௌண்டரிகளுடன் 35 ஓட்டங்கள் எடுத்தனர். இலங்கைத் தரப்பில் திசாரா பெரேரா 3 விக்கெட் வீழ்த்தினார்.

இலங்கை தோல்வி: பின்னர் துடுப்பெடுத்தாடிய செய்த இலங்கை அணியில் முன்னணி வீரர்கள் வேகமாக வெளியேறினாலும், தனி நபராகப் போராடிய சங்கக்காரா சதமடித்தார். அவர் 151 பந்துகளில் 12 பௌண்டரி களுடன் 133 ஓட்டங்கள் எடுத்தார். பின்வரிசையில் அதிரடியாக ஆடிய திசாரா பெரேரா 28 பந்து களில் 1 சிக்ஸர், 3 பௌண்டரி களுடன் 44 ஓட்டங்கள் எடுத்தார். இருப்பினும் இலங்கையின் தோல்வி தவிர்க்க முடியாததானது.

இந்தியத் தரப்பில் இர்ஃபான் பதான், உமேஷ் யாதவ், அஸ்வின் ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் இந்திய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

# 'கராத்தே'யில் வெற்றி

வலிகாமம்

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே இடம்பெற்ற பெண்களுக்கான "கராத்தே"ப் போட்டியில் மாவட்ட ரீதியாக வெற்றி பெற்றவாகளின் விபரங்கள் வருமாறு:

**50 கிலோ "குமிற்றி"**

1 ஆம் இடம் ஜே.எஸ்.சூசைநாயகி பெனிஸ் (மன்னார்) 2.ஆம் இடம் எஸ்.சுதர்சினி (முல்லைத்தீவு)

61 கிலோ "குமிற்றி"

1ஆம் இடம் எஸ்.சுதர்சினி (யாழ்ப்பாணம்)

"காட்டா"

1ஆம் இடம் ஜே.எஸ்.சூசைநாயகி பெனிஸ் (மன்னார்) 2.ஆம் இடம் கே.பிரசாந்தினி (யாழ்ப்பாணம்) 3ஆம் இடம் வை.சுகிர்தா (கிளிநொச்சி )

# ஐ.பி.எல்லில் போதைப் பாவனை: 27 வீரர்கள் பயன்படுத்தினர்



நடந்து முடிந்த ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்ற வீரர்களில் 44 பேர் போதைப் பொருள் பயன்படுத்தியதாக புகார் எழுந்தது. இதையடுத்து அவர்களுக்கு நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில் 27 வீரர்கள் போதைப் பொருள் பயன்படுத்தியது உறுதி செய்யப்பட்டுள்ளது.

புனே வாரியர்ஸ் அணிக்காக விளையா-டிய இந்திய கிரிக்கெட் வீரர் ராகுல் ர்மா, தென்னாபிரிக்க வீரர் வெயின் பர்னல் ஆகியோரும் போதைப் பொருள் பயன்படுத்தியது உறுதியாகியுள்ளது.

# வெளியேறினார் குலசேகர

இலங்கை அணியின் ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர் நுவான் குலசேகர இந்தியாவிற்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் ஏனைய 4 போட்டிகளிலும் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது போட்டியில் பிடியொன்றை எடுக்க முனைந்தபோது காயமடைந்ததை அடுத்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

போட்டியின் 11ஆவது ஓவரில் விரேந்தர் சேவாக் அடித்த பிடியொன்றைப் பிடிக்க முனைந்த நுவான் குலசேகர காற்பகுதியில் காயமடைந்திருந்தார். குறித்த பிடியை அவர் பிடித்திருந்த போதிலும், தொலைக்காட்சி நடுவரிடம் அந்தப் பிடி சரியானதா என நிர்ணயிக்க உதவி கோரப்பட்ட போது வழங்கப்பட்ட மீள் ஒளிபரப்புக்கள் தெளிவாகக் காணப்படாத நிலையில் விரேந்தர் செவாக் ஆட்டமிழக்கவில்லை என அறி விக்கப்பட்டது.

நுவான் குலசேகர தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டதை உறுதிப்படுத்திய அணித் தலைவர் மஹேல ஜெயவர்தன, அவருக்குப் பதிலாக எந்த வீரரை அணியில் சேர்ப்பது என்பது குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை எனத் தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டையில் ஸ்கான் செய்யும் வசதிகள் காணப்படாததன் காரணமாக கொழும்புக்குச் சென்ற பின்னரே ஸ்கான் செய்யப்படும் எனத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, குலசேகரவிற்குப் பதிலாக யாரை அணியில் சேர்ப்பது என்பது குறித்து தேர்வாளர்களுடன் பேச்சுவார்த்தை நிகழ்த்தப்படும் எனவும் தெரிவித்தார்.

நேற்றைய போட்டியில் நுவான் குலசேகர 5 ஓவர்கள் மாத்திரம் பந்துவீசியிருந்ததோடு, 11ஆம் இலக்கத்திலேயே துடுப்பெடுத்தாடக் களமிறங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஒலிம்பிக்கிலிருந்து விலகினார் நடால்

லண்டனில் ஆரம்பிக்கவுள்ள ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து விலகிக் கொள்வதாக உலகின் 3ஆம் நிலை டென்னிஸ் வீரரான ஸ்பெய்னின் ரபேல் நடால் தெரிவித்துள்ளார். தனது உடல்நிலையைக் கருத்திற் கொண்டே விலகிக் கொள்வதாக அவர் தெரிவித்தார்.

ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றுவதற்குரிய உடல்நிலையில் தான் காணப்படவில்லை எனத் தெரிவித்த ரபேல் நடால், அதன் காரணமாக ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி ஸ்பெய்னின் ஒலிம்பிக் குழுவினரோடு ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றப் பயணமாகப் போவதில்லை என நடால் தெரிவித்தார்.

என்ன உடல் உபாதை என அவர் தெரிவிக்காத போதிலும், அண்மைக்காலமாக தனது இடது முழங்காலில் உபாதைகளைச் சந்தித்து வந்த ரபேல் நடால், அதற்கான சிகிச்சைகளை அண்மைக்காலமாகப் பெற்று வந்தார். அத்தோடு கடந்த காலங்களிலும் அவருக்கு இதே முழங்கால் உபாதை காணப்பட்டிருந்தது.

2008ஆம் ஆண்டு பீஜிங்கில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் ஆண்கள் தனிநபர் போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்ற ரபேல் நடால், இவ்வாண்டு ஒலிம்பிக் போட்டிகளில் தனது தங்கத்தைக் காத்துக் கொள்ள முயற்சிக்கவிருந்ததோடு, ஸ்பெய்னின் சார்பாக ஆரம்ப விழாவில் ஸ்பெய்ன் தேசியக் கொடியை ஏந்தும் கௌரவத்தையும் பெறவிருந்தார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 23.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது